# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VIII

பகுதி 1

**Kerala Reader - Tamil (AT)**
**Standard VIII**
**Part - 1**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 8

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஆன்றோர் வாக்கு. எழுத்து என்பது மொழியையே குறிக்கும். பிற உயிரினங்களிடமிருந்து மனித இனத்தை வேறுபடுத்துவது மொழியே. மொழி இல்லையேல் சிந்தனை இல்லை; சிந்தனை இல்லையேல் மனிதனும் விலங்கும் ஒன்றுதான். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழக்கிலிருந்தன. காலந்தோறும் சில மொழிகள் வழக்கொழிந்து வருகின்றன. ஒரு மொழியின் அழிவு ஓர் இனத்தின் அழிவுக்கு வழிவகுத்துவிடும் என்பார்கள். எனவே எம் மொழியாயினும் அம்மொழியை வழங்குவோர் அதைப் பாதுகாக்க வேண்டும். தமிழ்மொழி தனித்துவம் மிக்கது. கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் வளமை குன்றாது வாழ்ந்தும் வளர்ந்தும் வரும் மொழி தமிழ் மொழி என்பது பெருமைக்குரியது.

உயர்நிலை வகுப்பை எட்டும் எட்டாவது வகுப்பு மாணவர்கள் மொழியின் அமைப்பையும் அடிப்படைக் கூறுகளையும் அறிந்திருப்பர். அவர்களின் மொழித்திறனை மேம்படுத்துவதும் மொழி ஆர்வத்தை ஊக்குவிப்பதுமாக மொழிக்கல்வி அமையவேண்டும். மொழித்திறனை அடைவதோடு நின்று விடாமல், அம் மொழியின் வாயிலாக மாணவர்களின் படைப்புத் திறனை வெளிக்கொணர்வதும் மொழிக் கல்வியின் நோக்கமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக மொழிக் கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பாடப்பகுதிகள் மாணவர்களின் சமூக ஈடுபாட்டிற்குத் தூண்டுகோலாகவும் அமையவேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடங்களைக் கசடறக் கற்றும், செயல்பாடுகளைச் செவ்வனே செய்தும் மொழிக் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VIII - AT (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Santhi, P.**
Associate Prof., Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. N. Ayyappan**
Associate Proffessor, S.T. Hindu College, Nagercoil.

**Dr. Benedy, K.**
Asst. Prof., Tamil, Govt. Art College, Thiruvananthapuram.

**Dr. D. Devadas**
Rtd. Proffessor, Scott Christian College, Nagercoil.

**Dr. Rajashekaran, L.**
Asst. Prof., Department of Folkloristics and Tribal Studies,
Central University of Karnataka.

### Members

**Archana, M.,** HST, CPMGHSS Peermade, Idukki.

**Mercy Premalatha, R.,** HST (Rtd.), LMS Tamil HS, Chervarakkonam, Parassala.

**Monikandan, T.,** Principal (Rtd), CPMCHSS, Peermade, Idukki.

**Velkuthalam, P.,** HST, GHSS, Chinnakanal, Idukki.

**Vijayakumar, K.**, HST, GCHS, Attakulangara, Thiruvananthapuram.

**Vijila Rani, M.**, HST, GTV & HSS, Chalai, Thiruvananthapuram.

**Anandu Rajin,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

**Shobin, S.S.,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்

பக்கம்

அலகு 1 நீர் வளம்

தேனருவி ........ 8 - 14

உயிர்நீர் ........ 15 - 21

அலையோசை ........ 22 - 28

அலகு 2 மானுடம் வெல்லும்

ஒன்றுபடுவோம் ........ 30 - 38

அன்பே அறம் ........ 39 - 44

ஓருயிராய் ........ 45 - 52

அலகு 3 வாழ்வு வளம் பெற

ஏர்ப்பின்னது உலகம் ........ 54 - 62

தறியும் தடுக்கும் ........ 63 - 71

ஆலைகள் செய்வோம் ........ 72 - 77

சொல்லகராதி ........ 78

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# நீர்வளம்



சுற்றுச்சூழலின் முக்கியப் பொருளாகக் கருதப்படுவது நீராகும். 'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. பல்வேறு நீர்நிலைகள் குறித்துத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

# தேனருவி



## அருவி வாழ்க!

கார்தழுவ வெற்பிருந்து கலந்த காதல்
        கனிந்ததனால் மெய்தழுவி மழையென் றாகிப்
பார்தழுவ இழிந்துவந்து பயன்வி ளைக்கப்
        படர்குறிஞ்சி சந்தனத்தோ டகிலும் தேக்கும்
சீர்தழுவிச் செடிகொடிகள் தழுவிச் சேர்த்த
        செல்வமெலாம் மக்களுக்காய்ச் சேர்க்க வென்றே,
ஊர்தழுவி உயிர்தழுவி உலகை யூட்டும்
        ஒப்பற்ற தாய்மைநேர் அருவி வாழ்க!

மலைமங்கை மார்பணியாம் வைரத் தொங்கல்;
        மாவீரன் வாள்வீச்சாம் ஒளியின் பாய்ச்சல்;
கலைநிலவின் குளிர்மையினைக் காட்டும் சாரல்;
        கார்குழலாள் தோள்தழுவி மணக்கும் முல்லை;
சிலம்பதிர முழவார்க்கும்; இன்பம் சேர்க்கும்
        செய்யவளின் நலம்சேர்க்க விரைந்து செல்லும்
நிலம்பார்த்து நடக்கின்ற நங்கை யென்ன
        நீள்பயணம் மேற்கொள்ளும் நிலம்செ ழிக்கும்

அருவியென இழிந்துவர வில்லை என்றால்
அச்சச்சோ! மண்மங்கை பொலிவி ழப்பாள்;
மருதப்பெண் வளமிழப்பாள்; தரிசு மாவாள்
மாமுல்லை கவினழியும்; கருகும்; வாடும்;
மருவிவரும் பாலையென வறுமை சூழும்
மாடுகன்று தாமழியும் உயிர்கள் வாடும்
பெருமைமிகு அருவியதன் பெற்றி நாளும்
பேசரிதாம்; போற்றிடுவோம்; அருவி வாழ்க

புலவர் வ. கலியபெருமாள்

**ஆசிரியர் குறிப்பு :** பாண்டிச்சேரியிலுள்ள சேலியமேடு என்னும் ஊரைச் சேர்ந்தவர் புலவர் வ. கலியபெருமாள். இவர் தமிழ் விரிவுரையாளர். இவரது "அழகின் சிலிர்ப்புகள்" என்னும் நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- இக்கவிதையை வாசித்து மையக்கருத்தைக் குறிப்பிட்டு நயம் பாராட்டி எழுதுங்கள்.
- பாடலில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதி அகரவரிசைப் படுத்துங்கள்.
- அருவியின் பயன்களைப் பற்றிக் கலந்துரையாடி விளக்கக்குறிப்பு எழுதுங்கள்.

## திருக்குற்றாலம்

ஆற்று வளமும் அருமையான காற்று வளமும் உடையது திருக்குற்றாலம். மஞ்சு தவழும் சோலை சூழ்ந்த குற்றால மலையில் மழை பொழியும்; அருவி சொரியும்; வெள்ளம் ஆறாகப் பாய்ந்து ஓடும். அங்கு,

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்"

என்று பாடினார் குறவஞ்சிக் கவிஞர். சிற்றாறு என்னும் சித்திரா நதியில் பெருகி வரும் வெள்ளமும், திருக் குற்றாலத்தில் நற்றவம் புரியும் சான்றோர் உள்ளமும் இக்கவிதையால் அழகுற விளங்குகின்றன.

திருக்குற்றாலத்தில் அருவிகள் பல உண்டு. வட அருவி என்பது சிறந்ததோர் அருவி. பொங்குமாங்கடல் என்னும் ஆழச் சுனையில் மூழ்கி எழுந்து பரந்து வீழும் அவ்வருவியைக் காண்பது ஓர் ஆனந்தம். இன்னும், ஐந்து கவராகப் பிரிந்து வீழும் அருவியும் அம்மலையிலே உண்டு. ஐந்தலை அருவி என்பது அதன் பெயர். 'தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்' என்று புகழப்பெற்ற தேனருவியும், சிற்றருவி என்று சொல்லப்படும் 'கானருவியும்' குற்றாலத்தில் உண்டு. இவ் அருவித் துறைகளில் நீராடி இன்புற்றவர் எண்ணிறந்தவர். மேலை நாட்டு மேதையரும் போற்றிப் புகழும் பெருமை வாய்ந்தது திருக்குற்றால அருவி.

மலையடிவாரத்தில் அமைந்த திருக்குற்றாலத்தில் கோங்கும் வேங்கையும், சந்தனமும் சண்பகமும் செழித்தோங்கி வளரும். வளமுற வளர்ந்த இம்மரங்களில் முல்லைக் கொடிகள் பின்னிப் பூத்து மணம் கமழும். வேங்கை மரத்தின் பொன் போன்ற மலர்களைப் பறித்துக் குறும்பலா மரத்தடியில் அமர்ந்த இறைவன் திருவடியிலே தூவி வணங்குவர். நாள்தோறும் இக்காட்சியைக் கண்ட யானைகளின் உள்ளத்திலும் ஆர்வம் பெருகிற்று; தாமும் குறும்பலா ஈசனைக் கும்பிட வேண்டும் என்னும் ஆசையால் ஆணும் பெண்ணுமாகப் பூப்பறிக்கப் புறப்பட்டன. ஓங்கி உயர்ந்த வேங்கை மரத்தில் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மலர்களைத் தம் துதிக்கையால் வளைத்துப் பறித்து மத்தகத்தில் ஏந்திக்கொண்டு, குறும்பலாவிற் போந்து தலை வணங்கித் தொழுதன.

அந்நிலையில் மத்தகத்தில் இருந்த மலர் ஈசன் சேவடியிற் சேர்ந்தது. இவ்வாறு யானைகளும் மலர் தூவி வழிபட்ட காட்சியைக் கண்டு இன்புற்ற திருஞான சம்பந்தர்,

"பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்தி
கூந்தற் பிடியும் களிறும்
உடன்வணங்கும் குறும்பலாவே"

என்று பாடியருளினார்.

குற்றால மலையில் பல வகையான பழங்கள் உண்டு. 'குலை வாழைத் தீங்கனியும் மாங்கனியும் தேன் பிலிற்றும்' என்று தேவாரத்தில் பாடப்பட்ட செழுஞ் சோலைகள் இன்றும் குற்றாலத்தில் உண்டு. அம்மலையின் ஆதிவாசிகளாகிய வானரங்கள் அப்பழங்களை வயிறாரத் தின்று வாட்டமின்றி வாழும்.



குற்றாலத்துக் குரங்குகள் தமிழ்ப் பாட்டில் அமையும் பேறு பெற்றுள்ளன. பூஞ்சோலையின் கிளைகளில் இருந்தும் நடந்தும் ஆடியும் ஓடியும் விளையாடுகின்ற குரங்குகளை நோக்கி, 'குற்றாலத்துக் குரங்கே! கொப்பை விட்டு இறங்கே!' என்று பரிந்து பாடுவர் இளம் பிள்ளைகள். பிள்ளைக் கவிஞராகிய திருஞான சம்பந்தரும் இக்குரங்குகளின் மூதாதைகளைக் குற்றாலத்திலே கண்டார்.

"மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி
மாந்தும் குற்றாலம்"

என்று அவர் அருளிய பாட்டு ஒரு செஞ்சொல் ஓவியம். குரங்கு ஒன்று குட்டியோடு மலையினின்று இறங்கிற்று; வாழைத் தோட்டத்தின் உள்ளே புகுந்தது; செம்மையாகப் பழுத்திருந்த வாழைக் குலையின்மீது அமர்ந்தது; பழங்கள் ஒவ்வொன்றாகப் பறித்தது; உரித்தது; தின்றது; தின்று கொண்டேயிருந்தது.

இயற்கை வளம் மலிந்த திருக்குற்றாலத்தின் இளங்காற்றிலே உள்ளே இன்ப சுகம் வேறெங்கும் காண்டல் அரிது. மந்தமாருதம் என்னும் அம் மெல்லிய பூங்காற்று நலிவுற்ற உடலுக்கு நன்மருந்து; இயற்கையன்னை அளிக்கும் இணையற்ற விருந்து.

– டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1896 ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் நாள் பிறந்தார். உரைநடை எழுதுவதில் மிகவும் பெயர் பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். 'சொல்லின் செல்வர்' என்று புகழப்படுகிறார். 'தமிழின்பம்' என்னும் நூலிற்குச் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். தமிழ் விருந்து, வேலும் வில்லும், ஆற்றங்கரையினிலே போன்ற ஏராளமான நூல்களைப் படைத்துள்ளார். 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாள் மறைந்தார்.

### செயல்பாடுகள்

- திருக்குற்றாலத்திலுள்ள அருவிகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- பாடப்பகுதியின் வாயிலாக நீங்கள் அறிந்த குற்றாலத்தின் இயற்கை வளத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- குறவஞ்சிக் கவிஞர் என்று சிறப்பிக்கப் படுபவர் யார்?
- குற்றால அருவியைப் போல, உங்களுக்குத் தெரிந்த ஓர் அருவியைக் குறித்து வருணனைக் குறிப்பு எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் இடம்பெறும் அருஞ்சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

## மழையே மழையே எங்கேதான் சென்றாயோ?

உலகிலேயே மிக அதிகமான அளவில் மழையைப் பெறும் இடமான சிரபுஞ்சி இருப்பது மேகாலயா மாநிலத்தில்தான். ஷில்லாங் நகரிலிருந்து 48 கி.மீ தொலைவில் 1300 மீட்டர் உயரத்தில் இருக்கும் ஒரு மலைக் கிராமம். இந்தக் கிராமத்தின் பாரம்பரியப் பெயர் ஸொஹ்ரா. இப்போது மேகாலயாவின் நகரங்களுக்கு அதன் பாரம்பரிய பெயர்களையே மறுபடியும் சூட்டியிருக்கிறது அரசு. அதனால், இப்போது சிரபுஞ்சியை ஸொஹ்ரா சிரபுஞ்சி என்றுதான் அழைக்கிறார்கள்.

ஸொஹ்ராவைப் பார்க்கப் பயணித்தால் பசுமைப் போர்வையணிந்த இரண்டு பிரம்மாண்டமான மலைகளுக்கிடையே சாலையில் பல இடங்களில் சிறிதும் பெரிதுமாக அருவிகள். எல்லாவற்றையும் அருகில் சென்று ரசிக்க நேரமில்லாததால் சிலவற்றை மட்டும் பார்த்துவிட்டுப் பயணத்தைத் தொடர்கிறோம். இந்த ஸொஹ்ரா மலைப் பகுதிகள் கீழே வங்காள விரிகுடாவிலிருந்து வரும் பருவக் காற்றைத் தடுப்பதனால்தான் இங்கு மழை அதிகம் பெய்கிறது. ஆனால், மேகாலயா மாநிலத்துக்கு எந்தப் பயனுமில்லாமல் மழை நீர் மீண்டும் கடலுக்குச் சென்றுகொண்டிருக்கிறது.

முதலில் எலிபெண்ட்டா ஃபால்ஸ் என அழைக்கப்படும் அருவிக்குச் செல்கிறோம். யானைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என வியப்பு. இத்தனைக்கும் மதுரை ஆனைமலை போல் யானை வடிவிலும் இல்லை. ஆனால், 100 ஆண்டுகளுக்குமுன் இந்த அருவி விழும் பாறை, யானை வடிவமாகக் காட்சியளித்ததாகவும், ஒரு நிலநடுக்கத்தில் அது உடைந்து விழுந்து பெயர் மட்டும் நிலைத்து நிற்பதாகவும் அங்கிருந்த தகவல் பலகை சொல்லுகிறது. சுமார் 200 அடி உயரத்திலிருந்து நான்கு அடுக்காக ஒரு சிற்றோடையாகக் கொட்டுகிறது அருவி. ஒன்றின் கீழ் ஒன்றாக 3 இடங்களில் பாலங்கள். அதிலிருந்து அருவியைப் பார்க்க முடிகிறது. ஆனால், ஒரு பெரிய அருவியின் கம்பீரத்தை உணர முடியவில்லை.

ஸொஹ்ராவிலிருந்து இன்னும் சற்று உயரத்திற்குச் சென்ற பின்னர், தொலைவில் மிக உயரத்திலிருந்து ஒற்றைக் கற்றையாகக் கீழே பாயும் ஓர் அருவியைப் பார்க்கிறோம். 335 மீட்டர் உயரத்திலிருந்து தரையில் விழும் இந்த அருவிதான் இந்தியாவிலேயே அதிக உயரமானது. உலகில் 4–ஆவது உயரமான அருவி இது என்றும், மழைக்காலத்தில் இன்னும் நிறைய தண்ணீர் கொட்டும் என்றும் சொன்னார்கள். 'இது வருவது எந்த நதியிலிருந்தும் இல்லை. மழைக்காலங்களில் சேரும் நீர்' என்றார்கள். பெயர்: நொஹலிக்கா ஃபால்ஸ்



அதன் உயரமும், உருக்கிய வெள்ளியாகக் கொட்டும் நீர் விழுந்து சேருமிடத்தில் பச்சையாக மாறிவிடுவதும் ஆச்சரியத்தை எழுப்புகிறது. சுற்றுலாப் பயணிகள் பார்ப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பராமரிப்பவர்கள் பார்த்தே பல ஆண்டுகளாகியிருக்கும். அங்கே மலையில் எடுத்த தேன் எனப் பாட்டில்களில் விற்கிறார்கள்.

சுண்ணாம்புக் கற்கள் நிறைந்த மலைப்பகுதிகளில் இயற்கை குகைகள் இருக்கும். அப்படிப்பட்ட குகைகள் இந்தியாவிலேயே அதிகமாக நிறைந்த பகுதி இது. சுண்ணாம்புக் கற்களுக்குள் இருக்கும் உப்புப் படிவங்கள் கரைந்து உள்நோக்கி செல்வதனால் இப்படிப்பட்ட குகைகள் உருவாகின்றன. அப்படிப்பட்ட ஒரு பெரிய குகை இந்த ஸொஹ்ராவில் இருக்கிறது. அதை மௌஸ்மாய் குகை என அழைக்கிறார்கள்.

திரும்பும் பயணம் மற்றொரு பாதையில். ஸொஹ்ராவின் மிக அழகான பகுதியாக வர்ணிக்கப்படும் ஏழு சகோதரிகள் என்று அழைக்கப்படும் அருவியைப் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறோம். ஸொஹ்ராவிலிருந்து 5 கி.மீ. தொலைவில் லாட வடிவமான மலைப்பள்ளத்தாக்கின் ஆழத்தில் விழும் ஏழு அருவிகள். அருவிகள் எதிலும் இப்போது அதிக நீரில்லை. ஏழு வடகிழக்கு மாநிலங்களை நினைவுறுத்த இந்தப் பெயர். இந்த அருவிகளும் எந்த நதியிலிருந்தும் வழியவில்லை. மழை நீர் மலைகளின் பல இடங்களிலுள்ள இடுக்கில் அமைந்த சுனைகளிலிருந்து வருபவை. இந்த அருவிகளில் ஒன்றின் அருகில் சென்றுப் பார்க்கிறோம். அருவியாக விழும் முன் நீர் ஓடி வர இருக்கும் ஒரு பெரிய நிலப்பரப்பு, இப்போது காலியாக இருப்பதால் அதில் நடக்கிறோம். சில இடங்களில் நீர் ஓடும் சத்தம். ஆனால், கண்ணிற்குத் தெரியவில்லை. நாம் நிற்கும் பாறையின் அடியில் ஓடி அருவிக்குப் போகிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம். ஒரு சில இடங்களில் அதைப் பார்ப்பதற்கு வசதியாகக் கிணறுபோல ஓர் அமைப்பை நிறுவியிருக்கிறார்கள். எட்டிப் பார்த்தால் கீழே மிக வேகத்தில் நீர் ஓடுகிறது.

இசை கேட்க முடியாத ஓர் அழகான வீணையைப் பார்த்தது போல, ஸொஹ்ராவைப் பார்த்துவிட்டு ஷில்லாங் திரும்புகிறோம்.

– இரமணன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த எழுத்தாளர். அரசியல், சமூக வரலாறு எனப் பல்வேறு தளங்களில் எழுதிக் கொண்டிருப்பவர். பயண நூல்கள், பிரமுகர்களின் வாழ்க்கை பயணங்கள் ஆகியவை வெளிவந்துள்ளன. 'கடைசி கோடு' புத்தகத்திற்காக திருப்பூர் தமிழ்ச்சங்க விருது பெற்றவர். தேசிய வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளியிலிருந்து ஸொஹ்ரா சிரபுஞ்சிக்குக் கல்விச் சுற்றுலா செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கை தயார் செய்யுங்கள்.
- நீங்கள் சென்று வந்த பயண அனுபவங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.
- நீங்கள் கண்டு இரசித்த அருவியின் அழகினை வருணனை செய்து குறிப்பாக எழுதுங்கள்.
- பாடப்பகுதியைப் போன்று பிற பயணக்கட்டுரைகளைத் தொகுத்து எழுதி வகுப்பில் வெளியிடுங்கள்.



# உயிர்நீர்



## நீர் வழிப்படூஉம்

தம்பி, என் பெயர் 'காவிரி ஆறு.' நான் மேற்குத்தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் பிறந்தேன். சிறிய ஊற்றாகத் தோன்றிய நான், மிகுந்த நீர்ப்பெருக்குடன் மைசூர் நாட்டை அடைகிறேன். இப்பகுதியில் கபினி, சிம்சா, ஏமாவதி, இலட்சுமண தீர்த்தம் என எனது தோழியர்களாகிய துணையாறுகள் என்னுடன் வந்து கலக்க நான் வடிவத்தில் பெரியவளாகத் தோன்றுகின்றேன்.

மைசூர் நாட்டில் 'கண்ணம்பாடி' என்னும் ஊருக்கருகில் என்மீது அணை கட்டப்பட்டுள்ளது. அங்கு நான் உருவத்தில் மேலும் பெரிதாகக் காணப்படுகின்றேன். இங்கு தண்ணீர், கடல் போல் தேங்கியிருப்பதால் மக்கள் என்னை, 'கிருஷ்ண ராஜ சாகரம்' என்று அழைக்கிறார்கள். இதன்பின் நான் அங்கிருந்து எண்ணற்ற கால்வாய்கள் வழியாகச் சென்று, வேளாண்மைக்குப் பயன்படுகின்றேன். இதனால் மைசூர் நல்ல வளம் பெறுகிறது.

அங்கிருந்து புறப்பட்ட நான், 'சீரங்கப்பட்டணம்' என்னும் புகழ்பெற்ற நகருக்கருகில் இரு பிரிவுகளாகப் பிரிந்து அவ்வூரைத் தழுவியவாறு நடக்கிறேன். பிறகு மீண்டும் ஒன்றாக இணைந்து காடு மலைகளில் புகுந்து, 'சிவசமுத்திரம்' என்ற இடத்தில், அருவியாகத் தரையில்

விழுகின்றேன். இங்குள்ள இயற்கையழகைக் காணவும், அருவியில் நீராடவும் நாள்தோறும் மக்கள் கூடுகின்றனர். அங்கிருந்து வேகமாகப் பாய்ந்தோடி வருகையில் சேலம் மாவட்டத்தில், 'மேட்டூர்' என்னும் இடத்தில் என்மீது மீண்டும் அணை கட்டியிருக்கிறார்கள். இது மிகப்பெரிய அணையாகும். இங்கிருந்து நான் சிறு சிறு கால்வாய்கள் மூலம் நெடுந்தூரம் சென்று நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்சுகிறேன். மேட்டூரில் எனது நீரைக் கொண்டு மின்சாரம் எடுக்கிறார்கள்.

இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் என்னுடன் நொய்யல், பவானி, அமராவதி, நந்தி ஆகிய தமிழகத் தோழியர்களாகிய துணையாறுகள் கலக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் திருவரங்கம் நகருக்கருகில் நான் மீண்டும் 'கொள்ளிடம்', 'காவிரி' என இரண்டாகப் பிரிகிறேன். அந்த நிலப்பகுதியில் திருவரங்கநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. அவ்வூரைத் தொட்டுக்கொண்டே செல்லும் நான் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு மாமன்னன் கரிகால் வளவன் கட்டிய கல்லணையில் தங்கி, பின்பு நான் தஞ்சை மாவட்டத்தை அடைகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நான் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, அரசலாறு எனப் பல கிளைகளாகப் பிரிந்து தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் பாய்ந்து, அம்மாவட்டங்கள் முழுவதையும் வளப்படுத்துகிறேன். என்னிடமிருந்து பிரிந்த கொள்ளிடம் ஆறு, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களின் எல்லைகளில் ஓடி, அப்பகுதிகளை வளப்படுத்துகிறது.

நான் பிறந்த இடத்திலிருந்து ஏறத்தாழ 760 கிலோ மீட்டர் தொலைவு நடந்தும், விரைந்தோடியும், இடையே அமைக்கப்பட்ட அணைக்கட்டுகளில் ஓய்வெடுத்தும் பாய்ந்து வந்தும் நாகை மாவட்டத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் என் தலைவனாகிய கடலுடன் கலந்து விடுகிறேன்.

காவிரியாகிய நான் போகுமிடங்களிலெல்லாம் பிறருக்கு உதவியே செய்து வருகிறேன். என் இரு பக்கங்களிலும் சூழ்ந்துள்ள வயல்களையும் மரங்களையும், நீராலும், உரத்தாலும் வளப்படுத்துகிறேன். மக்கள் அனைவருக்கும் பயன்படும் மின்சாரம் எடுக்க உதவுகிறேன். இந்த வாழ்க்கை எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

தம்பி, நீயும் பிறருக்கு உதவி செய். உன் பேரும் புகழும் மண்ணுலகம் உள்ளவரை நிலைக்கும். தம்பி, நீ பள்ளிக்குப் போ, நான் என் பயணத்தைத் தொடர்கிறேன்.

–இடையூர் சிவமதி

**ஆசிரியர் குறிப்பு :** மாணவர்களுக்கான பல்வேறு நூற்களை எழுதியுள்ளார். 1666 பொது அறிவு வினாடிவினா, வேடிக்கையான விடுகதைகள், மாணவர்களுக்கான பொது அறிவுத் தகவல்கள் போன்ற நூற்களைப் படைத்துள்ளார்.

**செயல்பாடுகள்**

- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில் காவிரியாறு பாய்ந்து வரும் இடங்களை வரிசைப்படுத்துங்கள்.
- கரிகால் வளவன் கட்டிய கல்லணையைக் குறித்த தகவல்களைத் திரட்டி குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள காவிரியாறு தன் வரலாறு கூறும் கட்டுரையை வாசித்தீர்களல்லவா? அதைப் போன்று கேரளத்தின் மிகப்பெரிய ஆறாகிய பெரியாறைப் பற்றிய தகவல்களைத் திரட்டி பெரியாறு தன்வரலாறு கூறுவதாகத் தன்வரலாற்றுக் கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

## ஊருணி நீர்



ஊரின் நடுவே ஒரு குளம். பெய்த பெரு மழையால் குளம் நீரால் நிறைந்திருந்தது.

குளம் ஊருக்கு அணியாக – அழகாக இருந்தது. இதனால் அதனை 'ஊருணி' என்று சிலர் கூறினார்கள்.

குளம் தனது நீரால் ஊரை உண்பித்தது. ஊர் உண்ண நீரைக் கொடுத்ததால் 'ஊருணி' என்று சிலர் கூறினார்கள். ஊருணி நீரால் ஊருக்குக் கிடைத்த பலன்கள் ஏராளம். செல்வர்கள் – எளியவர்கள் என்று வேறுபாடு இல்லாமல் நீர் எல்லோருக்கும் பயன்பட்டது. அந்த நீரைக் கொண்டு சென்று கால்நடைகளுக்கும் பயன்படுத்தினார்கள். அழகு தருவதோடு அருமையான பலன்களும் தரும் அந்தக் குளத்தை வள்ளுவர் நாள்தோறும் கண்டார். குளம் – ஊருணி – அவருக்கு ஒரு செல்வரை நினைவுபடுத்தியது.

நினைவில் வந்த செல்வர் மிகவும் நல்லவர். அவர் நெஞ்சம் அன்பால் நிரம்பி வழிந்தது. அவரது அருள் மனம் அவரை மற்றவர்களுக்காகத் தனது செல்வத்தை வாரி வாரி வழங்க வைத்தது. "நல்ல மனமும் –



சிறந்த அறிவும் கொண்டவர்களிடம் இருக்கின்ற செல்வம் ஊரார் நீருண்ணும் குளம்போல இருக்கின்றது" என்ற பொருளில்,

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்னும் குறளை எழுதினார்.

– மா. பா. குருசாமி

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த எழுத்தாளர். இதழியல் கலை, அக்கினிக் குஞ்சு, காந்தியப் பொருளியல், இலக்கியச் சிந்தனை, புரட்சிக்கவி போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
  பேரறி வாளன் திரு"

  என்ற குறள் உணர்த்தும் கருத்துகளைக் குழுவாகக் கலந்துரையாடி குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியிலுள்ள நீர்நிலைகளான குளம், ஏரி, கால்வாய், ஆறு, போன்ற நீர்நிலைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தித் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.
- உங்கள் ஊரிலுள்ள குளம், குப்பைகளால் மாசுபடுவதைத் தடுக்கக் கோரி ஊராட்சி மன்றத் தலைவருக்குப் புகார்க் கடிதம் எழுதுங்கள்.



## புனலும் மணலும்

இடவப்பாதி மழைக்காலம்

கிழக்கு மலைகளின் சரிவுகளில் விடாது கொட்டிக் கொண்டிருக்கும் மழை. கருக்கொண்டு, இருண்டு, திரண்டு ஏறிவரும் கருமேகக் கூட்டம் கணநேரத்தில் மலைமுகட்டில் உதிர்ந்து, சோவென்று கொட்டி அதிருகிறது.

மூக்குன்னி மலைச்சரிவின் கண்ணிற்குத் தெரியாத ஏதோ பள்ளத்திலிருந்து கோட்டை ஆறு, மலை வெள்ளத்தில் நுரைத்துச் சிலிர்த்து, இறக்கத்தில் வேகமாகக் கொட்டி, சமவெளியில் இரைத்துக்கொண்டு ஓடி வருகிறது.

மலை அடிவாரக் குற்றிக் காடுகளிடையே, வேய் மூங்கில் புதர்களையும், முளம்புல் கூட்டத்தையும் தாண்டி வெள்ளம், நுரை சிலிர்த்து ஓடி வரும்போது, அங்கிங்கான நாட்டுப் புறங்களின் செம்மண் திட்டுகளையும், சரல்மண் பகுதிகளையும் கரைத்து, தவழ்ந்து வந்து ஊர்களை வளமுள்ளதாக்குகிறது.

கோட்டையாறு, மழையின் வெள்ள வேகத்தில் தவழ்ந்து தவழ்ந்து ஓடையாகி, சிற்றாறாகி, புளியமரங்களும், காஞ்சிரவும், மஞ்சனாத்தியும், பெருமரங்களுமாக அடர்ந்த குண்டான் பாகம் எனும் காட்டுவெளி ஊரில் வரும்போது, 'ஆறு' என்ற முழுமையை அடைகிறது.

குண்டான்பாகம் காட்டு வெளியில் வெறும் மரச்சீனிக் கிழங்குத் தோட்டங்கள், செம்மண் வெளித்திட்டுகள், பச்சைக் காடுகள் இறைந்து கிடப்பதனால் நெல் வயல்களே இல்லை. வேரில் காய் தள்ளிய பலா மரங்களும் கொத்தாகக் காய்கள் காய்க்கும் மாமரங்களும், கமுக மரக்கூட்டமும் ஆற்றின் வளத்தில் செழித்துக் கிடக்கின்றன. வெறும் செம்மண் வெள்ளமாக ஓடி வரும் ஆற்றின் கன்னித்தன்மை குண்டான் கடவில் வரும்போது வேலி கட்டி நிறுத்தப்படுகிறது. பக்கவாட்டில் குலசேகரம், கொன்னி ஊர்களின் வயல்களுக்கு ஆற்று வண்டலும், வெள்ளமும் அத்தியாவசியமாகி விடுகின்றன. அதன் பயனாக ஆற்றின் துள்ளலுக்கு, மருதன்குழி பாலம் அணை கட்டுகிறது. ஓடி வந்த வேகத்தையெல்லாம் சீப்புக் கட்டிய அணைக்குழியில் நிறைத்துவிட்டு இரும்புத் தடுப்புகளின் மேல் பொங்கிய ஆறு, அய்யோவென்று அருவியாகக் கொட்டுகிறது.

கீழ்வெளிப் பள்ளமெங்கும், குட்டி யானைகள் போலப் பரவிக் கிடக்கும் பாறைகளில் முட்டி மோதிக்கொண்டு நுரை சிரித்தவாறு ஆறு பின்னும் ஓடுகிறது. ஒரு மைல் தொலைவில் ஜகதி ஊர் வரையில் அமைதியாக வளைந்து ஒழுகி, பாறைச்சிறை எனுமிடத்தில் வந்தவுடன், வில்வட்டமாக ஒருமுறை சுழன்று, பிறகு நெட்டுக்கு ஓடி வருகிறது.

ஆற்றின் இத்தனை தூரப் பயணத்தில், மருதன் குழி அணைவட்டத்தைவிட, பாறைச்சிறை, வில்வட்ட சந்தி முக்கியத்துவம் பெறுகிறது. எவ்வளவு மனோகரமான ஆற்றின் சுற்றம்! அதிக ஆழமில்லாமல், அலை ஓய்ந்த கடல் வெளிபோல, இருமருங்கும் சிமிண்டு கரைகட்டிய சலவைத் துறை. கரை வெளியில் நெடுங்கன், அயணி மரங்களும், தூங்கு மூஞ்சி பச்சை மரங்களும், தோகையாக வளர்ந்த மஞ்சள் மூங்கில் கூட்டமும், அங்கிங்காக முளைத்த ரத்தப்பூ கொத்துக் காட்டும் தெற்றிப்பூச் செடிகளும், கீழமேட்டில் குடிசைகளும், குடியானவர் வீடுகளும், கரும்பு வயல்களும், சர்க்கரை வள்ளிக் கிழங்கு வயல்களுமாக பாறைச்சிறை ஆற்றுப் படுகை அழகுக்கோலம் பூண்டிருக்கிறது.

குளியல் துறையில், வாண்டுகள் கிளை வெட்டிய வாழை மரங்களை மிதப்பன் படகுகளாக இட்டு வள்ளமேறி விளையாட்டு நடத்தும் களேபரம் நுரைகட்டி அதிரடிக்கும். பாறைகளின் மேலிருந்து ஆற்று வெள்ளத்தில் கரணமடித்து குதித்து, நீச்சலடித்து மறிவதில் பிள்ளைகளின் குஷி அலாதி. வெயில் காலத்து நீரில்லாத ஆற்றில், தண்ணீரைக் கலக்கியடித்துக் குதிக்கும் சிறுவர்களை விரட்டுவார்கள். "அட, எங்க பொழைப்பிலே மண்ணைப் போடாதீங்க ராசாமாருகளே, தண்ணி கலங்குது, சொல்லக் கேக்குதா?" என்று சினப்படுவார்கள்.



பாறைச்சிறை வெளியின் களேபரக் கூத்தை வணங்கிவிட்டு ஆறு நெட்டோட்டமாக இன்னும் இரண்டு கல் ஓடி, தொலைவில் வரும்போதே பெரியசாலைக் கடவு கண்ணிற் கெட்டுகிறது.

பெரியசாலைக் கடவு ஆற்றின் முகத்திற்கு மூக்கணி போன்றது. கடவிற்கு மேலே கப்பிமண் பாதையேறி தெற்குப் பகுதியில், சவிஸ்தாரமாக விரிந்து கிடப்பது சின்னவூர் சுடுகாடு. நகரத்தின் நாலைந்து மைல் சுற்று வட்டத்து சாக்காலை அடக்கமெல்லாம் இங்கேதான். கருமாதி காரியங்களுக்கும் தலைமுழுக்கிற்கும் பெரியசாலைக் கடவுத்துறை வெள்ளமிட்டிருக்கிறது. ஆறு இந்தப் பகுதியில் நீண்டு பரந்த குளிப்புத் துறையுடன் அமைந்திருக்கிறது.

பெரியசாலைக் கடவை நிறைத்துவிட்டு பிரியா விடைபெற்று வரும் மணப்பெண்ணைப் போல, ஆறு நகர்ந்து தவழ்ந்து வருகிறது. கப்பி ரோடு கிள்ளிப்பாலத்தைத் தாண்டி புத்தன் கோட்டையின் வெள்ளைப் பாறைகளின் ஊடே புகுந்து வல்லமேட்டிற்கு வரும்போது, ஆற்றுக்குத் தலைவட்டத்திலிருந்து துணை வந்து கலக்கிறது பெருமனை ஆறு. வல்ல மேட்டில்தான் ஆற்றின் சவிஸ்தாரமான சரித்திர வாழ்க்கை நடைபெறுகிறது.

– ஆ. மாதவன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1934 ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் பிறந்தார். கேரளத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு ஆ. மாதவன் கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்துள்ளது. புனலும் மணலும், கிருஷ்ணப் பருந்து, தூவானம் ஆகிய புதினங்களை எழுதியுள்ளார். 'இலக்கியச் சுவடுகள்' என்னும் கட்டுரை நூலிற்குச் சாகித்ய அகாதமி விருது கிடைக்கப்பெற்றது. 2021 இல் மறைந்தார்.

## செயல்பாடுகள்

- உலகத் தண்ணீர் தினத்தன்று நீர்நிலைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பள்ளிக் காலைக்கூட்டத்தில் வாசிப்பதற்கான உறுதிமொழி எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் இடம் பெறும் பிற மொழிச் சொற்களைக் கண்டறிந்து இணையான தமிழ்ச் சொற்களை எழுதி, இதுபோன்று உங்கள் பகுதியில் வழங்கப்படும் பிறமொழிச் சொற்களைத் திரட்டி அதற்கிணையான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.
- உங்கள் பகுதிகளில் காணப்படும் பல்வேறு நீர்நிலைகள் மாசடைந்ததால் பயனற்றதாக விளங்குகின்றன. இதைச் சுட்டிக்காட்டி இதற்கான காரணத்தையும், தீர்வையும் குறிப்பிட்டு நாளிதழுக்கு ஒரு தலையங்கம் எழுதுங்கள்.



# அலையோசை



## கடல்

"கடல் நீரும் நீல வானும்
கைகோக்கும்! அதற்கி தற்கும்
இடையிலே கிடைக்கும் வெள்ளம்
எழில்வீணை! அவ்வீணைமேல்
அடிக்கின்ற காற்றோ – வீணை
நரம்பினை அசைத்ததின் பத்தை
வடிக்கின்ற புலவன் தம்பி
வண்கடல் பண்பாடல் கேள்!"

– புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

கடல் பற்றிக் கவிஞரேறு கழறிய பாடல் இதுவாம்! வண்கடல் பண்பாடக் கேட்ட புலவனின் கடல் புகழ்ச்சி இது!

பரவை என்றொரு தமிழ்ப்பெயரை எம்முன்னோர் உனக்குத் தமிழில் சூட்டினர். அது உனக்குப் பெருமை! பரந்து கிடப்பதால் நீ பரவை. கடந்து கிடப்பதால் கடவுள்போல் நீ கடல். உன்னைக் கடப்பதாலே எங்களுக்கு வலிக்கும் உடல்!

உலகின் பரப்பில் முக்கால் பங்கை விழுங்கிக் கொண்டாய்! எனவே, நீதான் உலகின் பெரிய முதலாளி! உன் தொழிலாளர் அலைகள் இடைவிடாமல் போராட்டம் நடத்தியும் நீ மனமிரங்காப் பெரிய பண முதலையோ?

திமிங்கலம் என்னும் விலங்கினக் கூட்டை நாங்கள் பொருள்காட்சிச் சாலைகளில் பார்த்துப் பயந்தோம்! அதுகூட உன்னிடம் அடைக்கலம் கொண்டதே! படைக்கலத்திற்கும் உன்னையே உவமையாகக் கவிஞர் உரைப்பதும் உண்டு.

முத்தும் உன்னிடம் உடைய சொத்தே! உப்புச் சுவை இன்றேல் உலகமே சுவையறும். அந்த உப்புக்கும் தாயே!

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.'

என வள்ளுவர் வாக்கில் கூட நீ வந்திருக்கின்றாயே! அது ஒன்றே போதும்! அடியேன் சொல்லென்ன வேண்டும்!

கடவுளை உன் அலைகளால் தொழுகிறாய் என்றார், ஒரு கவிஞர்! கடவுளே உன் அலைகளில் பாம்பில் துயில்கிறார் என்றார், பக்தர்! பிறகு என்ன நீ கூட 'மதங்' கொண்டவள் தானே!

கதிரவனும்கூட உன்னிடம் உள்ள நீரைக் கொண்டுதானே பூமிக்கு நீர் தெளிக்கிறான்! உன் நீரால் வளரும் பூக்கொண்டு தானே பூமிக்குக் கோலம் போடுகிறான்!

ஏன்? கதிரவனே உன்னுள் மூழ்கித்தானே குளிர்கிறான்! கதிரவன் உமிழ்ந்த எச்சில் என்று உனை நான் உரைக்கமாட்டேன்! ஏன் தெரியுமா? நாகரிகம் கருதியே! நிறைவாய்க் கடலே நில்! நீ பூமிக்குச் சுற்றிய காவலனா? பூமியைச் சுற்றிய காலனா?

– செந்தமிழ்ச் செழியன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறுவர்களுக்கான இலக்கியங்கள் எழுதுவதில் சிறந்தவர். சிறுவர் கதைப் பூங்கா என்ற கதை நூலையும் மாணவர்களுக்கான பொதுக்கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். நம் பாடப்பகுதி இளங்கதிர் பொதுக்கட்டுரைகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் இடம் பெறும் பாரதிதாசன் கவிதையின் கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளி இலக்கிய இதழில் வெளியிட 'கடல் தரும் வளங்கள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- நீங்கள் கண்டு இரசித்த மாலை நேரக் கடல் காட்சியை வருணனை செய்து குறிப்பாக எழுதுங்கள்.

# ஆழி

நீலநிறச் சேலைகட்டி
நெளிந்தெழுந்த நடைபோட்டுக்
கோலவெழிற் மணற்பரப்பைக்
கொஞ்சவரும் கடல் அலையே!

கற்பனைக்குக் கருப்பொருளாய்
கண்ணொளிக்கு நீர்ப்பரப்பாய்
சிற்பிமனச் செயலுருவாய்
சிந்தையுறும் கடல் அலையே!

பவளமணி வெண்முத்து
பாய்ந்தோடும் மீன்கூட்டம்
தவழுபல உயிரினங்கள்
தாங்கிவரும் கடல்அலையே!

கவலையெனும் கறைநீங்க
கசிந்துருகும் கண்மலர
திவலைமணித் துள்ளியெழ
திரண்டுவரும் கடல் அலையே!

பரந்தமனப் பான்மையுடன்
பண்பாட்டு நெறிஒழுக்கம்
நிறைந்தவுயர் உள்ளமெலாம்
நின்னுவமை கடல் அலையே!



– கவிமாமணி பி. குமரேசன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் குமரி மாவட்டம் பறக்கை என்ற ஊரில் 1926–ஆம் ஆண்டு பிறந்தவர். மாணவப் பருவத்திலேயே கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் உள்ளமும் உருவமும், கவிஞர் தே.ப. பெருமாள் கவிதைகள் ஓர் ஆய்வு, பல்கலைச் செல்வர் சுந்தரனார் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- 'ஆழி' என்னும் கவிதையை வகுப்பில் வாசித்து, கலந்துரையாடிக் கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்றம் நடத்தும் கவிதைப் போட்டியில் பங்கேற்பதற்காக 'நீலக்கடல்' என்ற தலைப்பில் கடலின் அழகை வெளிப்படுத்தும் கவிதை ஒன்றை எழுதுங்கள்.
- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

◆ மணற்பரப்பு ◆ கண்ணொளி ◆ வெண்முத்து ◆ உயிரினங்களே

## கடல் பார்த்த அனுபவம்...



முதன் முதலில் கடல் பார்த்த அனுபவம் ஞாபகம் இருக்கிறதா?.. எனக்கு ரொம்ப நன்றாகவே இருக்கிறது. நான் முதல் முறையாகக் கடல் பார்த்தது என்னுடைய 17 வயதில்.. என்ன செய்ய .. சொல்லக் கேவலமாகத் தான் இருக்கிறது.. இதை விட இன்னொரு விசயம் சொல்லட்டுமா.. நான் குற்றால அருவியைப் பார்த்தது என்னுடைய 19 வயதில். நான் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அப்பா குற்றாலம் பக்கத்தில் ஆழ்வார்குறிச்சி.. அம்மா மேலகரம்.. குற்றாலத்தில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவு.. ஏன்னு கேட்டீங்கன்னா எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. அது அப்படித்தான்.

சரி.. கடல் பார்த்த அனுபவத்திற்கு வருவோம். எஞ்சினியரிங் நேர்காணல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த சமயம் .. சிதம்பரம் போக வேண்டும். அருகாமையில் உள்ள திருவெண்காடு என்ற வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஊரில் பெரியப்பா மகனான எனது சகோதரர் இருந்தார். அவர் பூம்புகார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர். அவரது வீட்டிற்கு நானும் அப்பாவும் சென்றிருந்தோம்.. அண்ணன் பொண்ணு கயல்விழிக்கு அப்போது மூன்று வயது இருக்கலாம். விடாது பேசிக் கொண்டு இருப்பாள் என்னுடன். அவளுக்கு நிறைய சந்தேகங்கள்... ஏதோ ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது "கடலை விடப் பெருசா.." என்று கேட்டு விட்டாள். நான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஏனெனில், அப்போது நான் கடல் பார்த்திருக்கவில்லை. மவுனமாக இருந்தேன்.. "சொல்லுங்க சித்தப்பா... கடலை விடப் பெருசா.." மீண்டும் கேட்டாள் அவள். எப்படிச் சொல்ல அவளிடம்..?

கடைசியில் சொல்லி விட்டேன். அவள் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.."என்னது....?"

உடனே அடுக்களைக்கு ஓடிச் சென்று என் மதினியிடம் (அவள் அம்மா) "அம்மா.. அம்மா.. சித்தப்பா.. இதுவரைக்கும் கடலையே பார்த்தது இல்லையாம்..." என்றாள்.

ஒரே களேபரம் தான்..."என்ன... இதுவரைக்கும் கடலையே பார்த்தது இல்லயா..." அவர் என்னிடம் கேட்டார்.

"நீ இதுவரைக்கும் கடல் பார்த்தது இல்லயோ.."

எப்படி இருக்கும் எனக்கு. மறுநாள், பூம்புகார் கடல் பார்க்க நான், அப்பா, அண்ணன், கயல்விழி நால்வரும் சென்றோம்.. மனசிற்குள் மானசீகமாக குட்டிப் பெண் கயலுக்கு நன்றி சொல்லிக் கொண்டேன். வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வு அல்லவா..

அவள் என் கைகளைப் பிடித்தபடி பேசிக் கொண்டே வந்தாள். "கடல் ரொம்பப் பெருசா இருக்கும்.. நல்லா ஊதாக் கலர்ல அழகா இருக்கும்.. அலை வேகமா வரும்.. பயந்து போய்டாதீங்க..." என்று சொல்லிக்கொண்டே எனக்குள் ஆசையை வளர்த்தி விட்டுக்கொண்டு வந்தாள். முதல்முறையாக அவளுக்குத் தெரிந்து, எனக்குத் தெரியாத விசயமும் கூட அல்லவா.. அதனால் கூடுதல் ஆர்வத்துடன் சொல்லிக் கொண்டே வந்தாள்.. திடீரென்று கேட்டாள். "சித்தப்பா.. உங்களுக்கு நீச்சல் தெரியுமா"

மறுபடியும் இக்கட்டில் நான். எனக்குத் தான் கடலே தெரியாதே. பின் எப்படி நீச்சல்?.. தெரியாது என்று உதட்டைப் பிதுக்கினேன். அவளுக்கு ரொம்ப சந்தோசம்,

"அப்படின்னா.. பத்திரமா என் கையைப் பிடிச்சுக்கோங்க.. அலை இழுத்துரும்.." என்னிடம் பயமுறுத்தினாள்.

கடைசியில் கடற்கரை வந்து விட்டது.. மனசிற்குள் சந்தோசம் கரை புரண்டது. நீண்ட, நெடிய கடல் பெருவெளியை இப்போது பார்க்கப் போகிறேன்.. படகோட்டியில் எம்.ஜி.ஆர் நடந்து சென்ற கடலை இப்போது இன்னும் கொஞ்ச நேரத்தில் நானும் பார்க்கப் போகிறேன்..

தூரத்தில் அலையின் பேரோசை கேட்டது.. ஒரு உயர்ந்த மணல் மேடு.. அதைத் தாண்டினால் நீலக் கடல்.



வேக வேகமாய் நடக்கிறோம்.. இப்போது என் கண்கள் ஆவலுடன் பார்க்கத் தொடங்கும் வேளையில், கயல்விழி என்னிடம் சொல்கிறாள்.

"சித்தப்பா.. கண்ணை நல்லா மூடிக்கோங்க..நான் சொல்லும்போது திறந்து பாருங்க.. இப்ப என் கையைப் பிடித்துக் கொண்டு நடங்க.."

நடந்தோம்... கடல் காற்று சில்லென்று முகத்தில் வீசியது. இப்போது அவள் என்னை மணலில் உட்காரச் சொல்லி விட்டு, என் கண்களைப் பின்னால் இருந்து பொத்திக்கொண்டு சொன்னாள். "சித்தப்பா...இப்ப கண்ணைத் தொறந்து பாருங்க..." என்று சொல்லி விட்டு, கைகளை எடுத்து விட்டாள்.

பொங்கிப் பாயும் கடல் அலைகள்... பேரிரைச்சலுடன் என் கால்களை நனைத்தது.. ஆனந்தம்.. பேரானந்தம்.. அன்னை வேளாங்கண்ணி திரைப்படத்தில் பார்த்த நீலக் கடல்.

நதிகள் மேப் வாங்கி, அதில் ஊதா நிற கலர் பென்சில் கொண்டு கடற்கரைக்கு வரைந்து பழகிய கடல்.. வங்காள விரிகுடாவை வரைபடத்தில் மட்டுமே பார்த்து இருந்த எனக்கு என் கண் முன்னே விரிந்த நிஜமான கடல்...

அலைகள் பொங்கி வருவதும், பின் பின்னோக்கிச் செல்வதும், பார்க்கும் வெளியெங்கும் நீர் வெளி....

"சித்தப்பா... அய்யய்யோ.. உங்க பாண்ட், சட்டை எல்லாம்.. தண்ணீ.. மணல் ஒட்டிட்டு இருக்கு..."

கயல் சத்தமாய் கூறினாள்.. நனையட்டும்.. அதனால் என்ன..

"என் கையைப் பிடிங்க... அலை உங்களை இழுத்துறப் போகுது..." அவள் குட்டிக் கைகள் இப்போது என் கைகளை இறுகப் பிடித்து இருந்தன. நான் நன்றி உணர்வுடன் அவளின் கைகளை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன்.

எனக்குக் கடலை அறிமுகம் செய்து வைத்த அதே கயல்விழி...

### இருக்கும் இடமே சிறப்பு!

கடலுக்கு எப்போதுமே ஒரு வருத்தம்.

தன் கரையில் உட்கார்ந்து காற்று வாங்குகிறார்கள்; அலைகளில் கால்களை நனைத்து மகிழ்கிறார்கள்; ஆனால் ஒருவர்கூடத் தன் நீரைப் பருகுவதில்லையே என்னும் ஏக்கம். சிறிய கிணறு அருகிலிருக்க எல்லாரும் அங்கு சென்று தானே தாகத்தைத் தீர்த்துக் கொள்கிறார்கள். கிணற்றைப் பார்க்கும் பொழுதெல்லாம் கடல் சொல்லும்;

"நீயும் என்னோடு இணைந்துவிடு. பெரியதாய் ஆகிவிடுவாய்."

கிணறு சிரித்துக்கொண்டே சொல்லும், "நான் உன்னோடு இணைந்து உப்பானால், என்னில் தாகம் தணிக்க வருபவர்கள் என்ன ஆவார்கள்? நாம் இருவரும் தனித் தனியாய் இருப்பதால்தான் இருவருமே சிறப்புறுகிறோம் "

ஊறுகின்ற எதுவும் தேங்கி நின்றாலும் ஒடுவதற்கே ஒப்பாகும் அல்லவா?

வெ. இறையன்பு

இன்று பெரிய பெண்ணாகி, ஒரு பெண்ணுக்குத் தாயாகி, கவிதைகள் எழுதும் கவிஞராகி, தேசத்தின் தலை நகரில் இருக்கிறாள்..

நன்றி என் அருமை மகளே... கடலை அறிமுகம் செய்து வைத்ததற்கு.

– இரா. நாறும்பூநாதன்

**ஆசிரியர் குறிப்பு :** தமிழ் இலக்கிய உலகில் சிறந்த எழுத்தாளர். கண்முன்னே விரியும் கடல், ஜமீலாவை எனக்கு அறிமுகப்படுத்தியவன், திருநெல்வேலி, நீர் – நிலம், மனிதர்கள், கனவில் உதிர்ந்த பூ போன்றன இவரது படைப்புகள் ஆகும்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் இடம்பெறும் பேச்சு வழக்கிலான வாக்கியங்களைத் தூயத் தமிழ் நடையில் எழுதுங்கள்.
- நீங்கள் கடலைப் பார்த்திருப்பீர்களல்லவா? முதன்முதலாக நீங்கள் கடலைப் பார்த்தபொழுது கிடைத்த அனுபவத்தை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- உலகச் சுற்றுச்சூழல் தினத்தில் உங்கள் பள்ளியில் நடைபெறும் கருத்தரங்கில் வெளியிடும் பொருட்டு 'நீர்வளமே நாட்டு வளம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.
- உங்கள் பகுதியிலுள்ள சுற்றுலாத் தலங்களைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அவ்விடத்தின் சிறப்புகளை விளக்கிக் கூறும் விதம் வழிகாட்டி உரை தயார் செய்யுங்கள்.



அலகு 2

# மானுடம் வெல்லும்



பல்வேறு மனிதர்கள் ஒன்றாக இணையும்போது சமூகம் உருவாகிறது. சமூகத்தில் வாழும் மக்கள் பல்வேறு விழுமியங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாயிருந்தாலும் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனநிலையோடு வாழ்ந்தால் அங்கு சமத்துவமும் சகோதரத்துவமும் ஒற்றுமையும் நிலவும்.

# ஒன்றுபடுவோம்



## ஒவ்வொரு புல்லையும் ...

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்
பறவைகளோடு எல்லை கடப்பேன்
பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்
எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்
நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கையிலும் நெஞ்சம் படரும்
எனக்கு வேண்டும் உலகம் ஓர்கடலாய்
உலகுக்கு வேண்டும் நானும் ஓர்துளியாய்
கூவும் குயிலும் கரையும் காகமும்
விரியும் எனது கைகளில் அடையும்
போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்
பொங்கும் சமத்துவப் புனலில் கரையும்
எந்த மூலையில் விசும்பல் என்றாலும்
என்செவிகளிலே எதிரொலி கேட்கும்
கூண்டில் மோதும் சிறகுகளோடு
எனது சிறகிலும் குருதியின் கோடு!

சமயம் கடந்த மானுடம் கூடும்
சுவரில்லாத சமவெளி தோறும்
குறிகளில்லாத முகங்களில் விழிப்பேன்
மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்.

– கவிஞர் இன்குலாப்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் கவிஞர், நாடக ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர் என பன்முகம் கொண்டவர். 1944–ஆம் ஆண்டு பிறந்தார். இயற்பெயர் சாகுல் அமீது. வெள்ளை இருட்டு, சூரியனைச் சுமப்பவர்கள், கிழக்கும் பின்தொடரும் போன்ற கவிதைத் தொகுப்புகளை படைத்துள்ளார். 'காந்தள் நாட்கள்' என்னும் கவிதை நூலுக்குச் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார். 2016–ஆம் ஆண்டு மறைந்தார்.

**செயல்பாடுகள்**

- 'ஒவ்வொரு புல்லையும்...' எனும் கவிதையை வாசித்துக் கலந்துரையாடி மையக்கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- கவிதையில் இடம்பெறும் மோனை, இயைபு, முரண் போன்ற நயங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- "எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்
  உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்"
  என்னும் பாடல் வரிகள் உணர்த்தும் கருத்தினை இன்றைய சமூகச் சூழலுடன் ஒப்பிட்டு விமர்சனக் குறிப்பு தயாரியுங்கள்.

## அடிப்படை ஒன்றுதான்

ஒரு சமயம் சங்கப் புலவர்கள் யாவரும் கூடியிருந்த அவையில் பாண்டிய மன்னன் புலவர்களை நோக்கி ஒரு ஐயத்தை வெளியிட்டான். "குபேரன் முதல் கோவணாண்டிவரை வாழ்க்கைக் கயிற்றில் ஒரே நூலில் கோர்க்கப்பட்டிருந்தும் அவர்களுக்குள் தகுதியினால் வேறுபாடு ஏன்? 'அடிப்படையில் ஒற்றுமை' என்பதே கிடையாதோ?"

பாண்டியனுடைய இந்த வினாவே அர்த்தமற்றதாகப்பட்டது, புலவர்களில் அநேகருக்கு. 'என்ன நோக்கத்தோடு இதை அவன் கேட்கிறான்?' என்பதும் அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் திகைத்துப் பேசாமல் இருந்துவிட்டார்கள். நக்கீரரால் மட்டும் அப்படி இருக்க முடியவில்லை. அவர் விடை கூறினார்:

"மன்னர் மன்னவா! ஜீவனம் என்ற ஒரே வரிசையில் உலக நூலில் உயிர் முத்துக்கள் பரம்பொருளால் தொடுக்கப் பெற்றிருக்கின்றன.

அவைகளில் ஏற்றத்தாழ்வு என்பது காணும் கண்களாலே ஏற்படும் ஒரு வகை மயக்க உணர்வே ஒழிய, உண்மையாக நோக்கினால் வாழ்வின் அடிப்படையில் ஒருமை தான் உலகெங்கும் நிலவுகிறது!"

"புலவர் பெருந்தகையே! உங்கள் விடை எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஊட்டுகின்றது. ஆனால் வாழ்க்கை அடிப்படையின் 'அந்த ஒருமைப் பாட்டை' எனக்கு நீங்களே விளக்கிக் காட்டினீர்களாயின் நலமாயிருக்கும் என்று எண்ணுகின்றேன்."

"பொதியமலைக் காடுகளுக்கு என்னோடு புறப்பட வேண்டும் அரசே! வாழ்க்கையின் அடிப்படை ஒருமையைத் தெரிந்து கொள்வதற்காக"

இரண்டு நாட்களுக்குப் பின் எளிய உடையும், தோற்றமும் கொண்டு நக்கீரரைப் பின்பற்றிப் பொதியமலைக் காடுகளில் சுற்றிக் கொண்டிருந்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

காட்டு வழியில் நடந்து சென்று கொண்டே இருக்கும்போது திடீரென்று நக்கீரர் பாண்டியனுக்கு ஒரு மரத்தடியைச் சுட்டிக் காட்டினார்.

குரூரமான தோற்றத்தையுடைய ஒரு வேடன் அங்கே மரத்தடியில் வில்லும் கையுமாகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் சுற்றும்முற்றும் வேட்டைக்குரிய மிருகங்கள் எவையேனும் வருகின்றனவா என்று சுழன்று சுழன்று துழாவிக் கொண்டிருந்தன. பறவைகளைப் பிடிப்பதற்காகப் பக்கத்தில் அவன் வலையும் விரித்திருந்தான். ஆனால் வலையில் அன்று அதுவரை ஒரு பறவைகூடச் சிக்கியதாகத் தெரியவில்லை."அது சரி பார்த்தாகிவிட்டது. இந்த வேடன்

### ஆகுபெயர்

(வகுப்பறையில் ஆசிரியர் நிற்கிறார். அகில் தாமதமாய் வருகிறான்)

| | |
|---|---|
| ஆசிரியர் | : என்ன அகில்? ஏன் தாமதித்து வந்தாய்? |
| அகில் | : மன்னித்து விடுங்கள் ஐயா! எங்கள் அப்பா வெற்றிலை விவசாயம் செய்கிறார். இன்று வெற்றிலை நட உதவி செய்யுமாறு கேட்டார். அவருக்கு உதவி செய்துவிட்டு வரும்போது சற்றுத் தாமதமாகிவிட்டது. (அகிலின் பதிலைக் கேட்ட மாணவர்கள் கொல்லெனச் சிரித்தனர்.) |
| ஆசிரியர் | : சரி! இனி இப்படி தாமதமாக வரக்கூடாது. |
| அகில் | : நன்றி ஐயா! |
| ஆசிரியர் | : (மாணவர்களைப் பார்த்து) ஏன் சிரிக்கிறீர்கள்? |
| மாணவர்கள் | : வெற்றிலையை நட்டதாகக் கூறினானே. அதான்...... |
| இளங்கோ | : ஐயா! எனக்கொரு சந்தேகம். வெற்றிலையை நட்டால் அது வளர்ந்து விடுமா? |
| ஆசிரியர் | : வெற்றிலை இலையை நடமாட்டார்கள். வெற்றிலைச் செடியைத்தான் நடுவார்கள். 'வெற்றிலையை நட்டான்' எனக் கூறும்போது வெற்றிலை என்பது அந்தச் செடிக்கு ஆகி வந்தது. இதற்குத்தான் ஆகுபெயர் என்று பெயர். அதாவது ஒன்றன் இடுகுறிப்பெயர் |

மரத்தடியில் வில்லோடு நின்று கொண்டிருப்பதிலிருந்து என்ன தத்துவம் கிடைக்கிறது நக்கீரரே?" பாண்டியன் கேட்டான்.

நக்கீரர் அவனுக்கு மறுமொழி சொல்லவில்லை; 'பொறு! பின்பு சொல்லுகிறேன்' என்பதற்கு அறிகுறியாகக் கையால் ஜாடை காட்டிவிட்டு அவனையும் அழைத்துக்கொண்டு அந்த வேடனை நெருங்கினார்.

"ஏன் அப்பா, இப்படி, வில்லும் கையுமாக இங்கேயே காத்திருக்கிறாய்?" நக்கீரர் வேடனை நோக்கிக் கேட்டார்.

"அதையேன் கேட்கிறீர்கள் ஐயா? நேற்று நடு இரவிலிருந்து காத்துக் கிடக்கிறேன். உறக்கமில்லை. உணவில்லை. இதுவரை ஒரு மிருகம்கூட வேட்டைக்கு அகப்படவில்லை. போங்கள்!"

வேடனின் இந்த மறுமொழியைக் கேட்டு நக்கீரர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியைப் பார்த்து ஒரு இளநகை புரிந்தார். ஆனால் நக்கீரர் எதற்காகத் தன்னை நோக்கி அப்படி நகைத்தார் என்பதன் விளக்கம் பாண்டியனுக்கு அப்போது தெளிவாகவில்லை.

"ஆமாம்; நீ ஏன் காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடுகின்றாய்? வேறு வகையில் நீ வாழ முடியாதா?" நக்கீரருடைய இந்த இரண்டாம் கேள்வி அந்த வேடனைச் சற்றே திடுக்கிடும்படியாகச் செய்தது. ஆயினும் சமாளித்துக்கொண்டு விடை கூறினான் அவன்.

"ஐயா! உண்டு, உடுத்து வாழ வேண்டிய மனிதன்தானே நானும்? மிருகங்களை வேட்டையாடுவது இழிதொழில்தான். ஆனால், நான் இந்தத் தொழிலை விட்டுவிட்டால் உண்ண இறைச்சிக்கும், உடுக்கத் தோலுக்கும்

---

அதன் நேரடிப் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகி வருவது. இதைத் தான் இன்று கற்பிக்க நினைத்தேன். சரியாக அகிலும் அதற்குப் பொருத்தமான உதாரணம் கொண்டு வந்தான்.

இளங்கோ : ஆகுபெயர் குறித்து வேறு சில உதாரணங்களைக் கூறுங்கள் ஐயா!

ஆசிரியர் : நம் அன்றாட வாழ்க்கையில் நாம் ஏராளமான ஆகுபெயர்களைப் பயன்படுத்துகிறோம். வயநாடு பேரிடரைக் குறித்து அறிந்தவுடன் நாடே சோகத்தில் மூழ்கியது என்று கேள்விப்பட்டோம் அல்லவா? இதில் நாடு என்பது நாட்டு மக்களுக்கு ஆகி வந்தது. அதுபோல வகுப்பே சிரித்தது, ஊரே அழுதது எனக் கூறுவதும் ஆகுபெயர்களே.

இளங்கோ : புரிந்தது ஐயா! அதாவது வகுப்பு என்பது வகுப்பு மாணவர்களுக்கு ஆகி வந்தது. ஊர் என்பது ஊர் மக்களுக்கு ஆகி வந்தது. எனவே இவை ஆகுபெயர்கள். சரிதானே ஐயா!

ஆசிரியர் : ஆமாம். அனைவருக்கும் ஆகுபெயர் பற்றிப் புரிந்ததா?

மாணவர்கள் : புரிந்தது ஐயா!

ஆசிரியர் : சரி ஆகுபெயருக்குச் சில வகைகளும் உண்டு அவற்றை நாம் அடுத்த வகுப்பில் கற்கலாமா?

மாணவர்கள் : சரி ஐயா!

எங்கே போவேன்? கல்வியறிவற்ற காட்டுப் பயலான எனக்கு வேறு எந்தத் தொழிலும் தெரியாதே ஐயா!"

வேடன் இந்த விடையைக் கூறி முடித்ததும் நக்கீரர் மீண்டும் பாண்டியனை நோக்கிப் பொருள் பொதிந்த சிரிப்பு ஒன்றை வெளியிட்டார். பாண்டியனுக்கோ அதன் பொருள் இப்போதும் விளங்கவில்லை. 'தன் சிரிப்பின் பொருளை உக்கிரப் பெருவழுதி இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை' என்பதை அவனுடைய முகக் குறிப்பிலிருந்தே நக்கீரர் அனுமானித்துக் கொண்டார்.

"அரசே! போகலாமா?" நக்கீரர் பாண்டியன் காதருகே மெல்லிய குரலில் கேட்டார். இருவரும் அந்த வேடனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர். சிறிது தொலைவு வந்ததும், "இந்த வேடன் மறுமொழி கூறிய போதெல்லாம் என்னைப் பார்த்து நகை புரிந்தீர்களே, அதற்கு அர்த்தமென்ன?" பாண்டியன் கேட்டான்.

"அதற்கு அர்த்தம் இருக்கத்தான் இருக்கிறது! அந்த அர்த்தத்தைச் சொல்லுவதற்கு முன்னால் உன்னிடமும் சில கேள்விகளை நான் கேட்க வேண்டியிருக்கிறது. தயவு செய்து சினமோ ஆத்திரமோ அடைந்துவிடாமல் தவறாகவும் புரிந்து கொள்ளாமல் என்னுடைய அந்தக் கேள்விகளுக்கு அமைதியாக நீ பதில் கூறவேண்டும்."

"சரி நக்கீரரே! கேளுங்கள், பதில் கூறுகிறேன்."

"அரசே! உங்களுக்கும் இந்த வேடனுக்கும் ஏதாவது ஒற்றுமையைக் காண்கின்றீர்களா? இல்லையா?"

"என்ன நக்கீரரே! இப்படிக் கேட்கிறீர்கள்? நான் பாண்டி நாட்டுப் பேரரசன்; இவன் வெறும் காட்டு வேடன்; படிப்பறிவற்றவன்; நாகரிகமற்றவன். இவனுக்கும் எனக்கும் என்ன ஒற்றுமை இருக்க முடியும்? நீங்கள் என்னைக் கேள்வி கேட்கிறீர்களா? அல்லது கேலி செய்கிறீர்களா?"

"நீங்களும் ஒரு மனிதன்! நானும் ஒரு மனிதன்! இந்த வேடனும் ஒரு மனிதன்தான்; இந்த ஓர் ஒற்றுமையையாவது நீங்கள் ஒப்புக் கொள்ள முடியுமா இல்லையா?"



"சரி! இவனையும் ஒரு மனிதன் என்றே வைத்துக் கொள்வோம்! அப்புறம்.. மேலே கூறுங்கள்."

"பாண்டிய மன்னா! உனக்கும் எனக்கும் இந்த வேடனுக்கும் இன்னும் எண்ணற்ற எல்லா மனிதர்களுக்கும் உயிர் வாழ உணவும், மானத்தை மறைக்கத்

துணியும் என்ற இந்த இரண்டு தேவையும் அவசியம்தானே? இதில் ஏதும் வேற்றுமை கற்பிக்க முடியாது அல்லவா?"

"ஆமாம் உணவு, உடை இவை பொதுவானவைதான்? மேலே சொல்லுங்கள்!"

"மன்னராகிப் பிறருக்குச் சிறிதும் உரிமையின்றிக் கடல் சூழ்ந்த ஒரு நாடு முழுவதையுமே ஒரு குடைக்கீழ் ஆளும் பேரரசன் நீ! ஆனால் எனக்கும் இந்த வேடனுக்கும் உனக்கும் இறைவன் அளித்திருக்கும் கைகால் முதலிய அவயவங்கள் 'கூடக் குறையவா' இருக்கின்றன!"

"இல்லை! வேடனுக்கும் உங்களுக்கும் அரசனாகிய எனக்கும் ஏன் எல்லோருக்குமே இறைவன் கொடுத்த உடல் ஒரே அமைப்புள்ள உடல்தான்."

"அரசே! செல்வத்தாலும் பதவியாலும், உங்களுக்கும் இந்த வேடனுக்கும் வேறுபாடு இருக்கலாம்! உனக்குச் செல்வத்தைக் கொடுத்த இறைவனும், வேடனுக்கும் உனக்கும் வேற்றுமை கற்பித்துக் காட்ட ஒரு கருவியாக அதை அளித்தானில்லை. பிறருக்கு ஈதல், அறம் செய்தல் முதலிய செயல்களுக்காகவே அந்தச் செல்வத்தை உங்களிடம் அளித்துள்ளான் இறைவன். அதை நீங்களாகவே அனுபவித்து விடவும் முடியாது. அனுபவித்தால் அது உங்களிடம் நிலைக்கவும் நிலைக்காது. விரைவில் தப்பிச் சென்றுவிடும். எனவே கடல் சூழ்ந்த உலகத்தைத் தன் ஒரே வெண் கொற்றக்குடைக்கீழ், பிறரெவர்க்கும் சொந்தமின்றி ஆளும் ஏகச்சக்ராதிபதிக்கும், இரவும் பகலும் தூங்காமல் வில்லால் வயிற்றுக்கு உணவும் உடலுக்கு உடையும் தேடும் படிப்பறிவில்லாத இந்த வேடனுக்கும் வாழ்க்கை அடிப்படை ஒன்றுதான்!" நக்கீரர் கூறி நிறுத்தினார்.

பாண்டியன் உக்கிரப்பெருவழுதி நக்கீரரைக் கைகூப்பி வணங்கினான். "பாவலர் திலகமே! உண்மை புரிந்துவிட்டது. அடிப்படை ஒன்றேதான்" என்ற சொற்கள் பாண்டியனிடமிருந்து வெளிவந்தன.

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

(புறநானூறு – 189)

– நா. பார்த்தசாரதி

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1932 இல் பிறந்தார். தீபம் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். குறிஞ்சி மலர், பொன்விலங்கு போன்ற புதினங்களைப் படைத்துள்ளார். சமுதாய வீதி என்னும் நெடுங்கதைக்காக சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார். இவர் 1987–ஆம் ஆண்டு மறைந்தார். புறநானூற்றுச் சிறுகதைகள் என்னும் கட்டுரைத் தொகுப்பிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- பாண்டிய மன்னரின் சந்தேகத்திற்கு நக்கீரர் அளித்த விளக்கம் பற்றி உங்களது கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- "உண்பது நாழி உடுப்பவை இரண்டே
  பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே" – புறம்

  "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
  செய்தொழில் வேற்றுமை யான்" – குறள்

  என்னும் வரிகளை ஒப்பீடு செய்து குறிப்பெழுதுங்கள்.
- ஆகுபெயரை உதாரணங்களுடன் விளக்கி எழுதுங்கள்.
- பள்ளிக் கலை விழாவில் 'அடிப்படை ஒன்றுதான்' எனும் பாடப்பகுதியை நாடகமாக மாற்றி நடியுங்கள். அதைக் காணொளியாகப் பதிவு செய்து பள்ளி இலக்கியமன்ற விழாவில் வெளியிடுங்கள்.

## சமத்துவம்



"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

அன்பின் வழியில் அனைவரும் சமம் என்று வாழ்பவரின் உடல் தான் உண்மையில் உயிருள்ளது. அன்பில்லாத உடல் வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புகள் மட்டுமே....

மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். ஏற்றத்தாழ்வின்றி ஒன்று போல எண்ணுகின்ற மனப்பான்மையைச் சமத்துவம் என்கிறோம். உலகில் உள்ள அனைத்தும் அனைவர்க்குமானது. பொருள் நிலையில் மட்டுமல்ல, புகழ் நிலையில் மட்டுமல்ல, மரியாதை, மதிப்பு நிலையிலும் அனைவரையும் சமமாக பாவிப்பதே சமத்துவம்.

ஒருவேளை செல்வத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கலாம்.
எனினும் எல்லோரும் சமம்.

கல்வி நிலையில் ஏற்றத்தாழ்வு இருக்கலாம்
எனினும் எல்லோரும் சமம்.
பதவிகளில், அதிகாரங்களில் வேறுபாடு இருக்கலாம்.

மனிதன் என்ற நிலையில் 'எல்லோரும் ஒன்று, எல்லோர்க்கும் எல்லாம்' என்கிற கொள்கையே சமத்துவம். "எல்லாரும் ஓர் விலை" என்பதே சமத்துவம். நான், நீ என்னாமல் இவன், அவன் என்னாமல் 'நாம்' என்பதே சமத்துவம்..

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சமத்துவத்திற்குச் சாட்சி சொன்னார் திருவள்ளுவர்.

எல்லாம் சரி தான். எனினும் சமத்துவத்திற்குச் சம்மட்டி அடி கொடுக்கும் கொடுஞ்செயல்கள் அன்றாடம் அரங்கேறுவதை அறிகிறோமல்லவா. ஆம், மொழியைச் சொல்லி சமயத்தைச் சொல்லி, சாதியைச் சொல்லி, இனத்தைச் சொல்லி, நிறத்தைச் சொல்லி, பிராந்தியத்தைச் சொல்லி, கலவரங்களை ஏற்படுத்தி, காணாமல் போன மனித உயிர்கள் எத்தனையெத்தனை... இருந்தாலும் சமத்துவ முழக்கமும் கேட்டுக் கொண்டுதான் வருகின்றது.

1879–ல் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற கருத்துக்கள் உலகம் முழுக்க எதிரொலித்தன.

உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி.... என்ற மனநிலை அனைவர்க்கும் வர வேண்டும். ஏனெனில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.. மனித இனம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பொன் மொழியில் முதல் பகுதி இதையே வலியுறுத்துகிறது. "ஒன்றே குலமென்று பாடுவோம்" இது திரை இசைப்பாடல்.

ஆகவே அனைவர்க்கும் இருக்க வேண்டிய அருங்குணம் சமத்துவம்... வாழ்வோம், வளர்வோம் சமமாய்! துய்ப்போம் அனைத்தும் சமமாய் நிலவட்டும் நீணிலத்திலே சமத்துவம்..

மலரட்டும் மனிதம்!

– கப்பியறை வ. இராயப்பன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். பாதை தவறிய பயணங்கள், கயத்தாறு தரிசனம், வாழ்வியல் வழிகாட்டும் விவேக சிந்தாமணி போன்ற நூல்களைப் படைத்துள்ளார்.

**செயல்பாடுகள்**

- "எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்" – பாரதியார்

  மேற்காணும் மேற்கோள் போன்று சமத்துவக் கருத்துகொண்ட மேலும் சில மேற்கோள்களைத் திரட்டி வகுப்பறையில் வெளியிடுங்கள்.

- சமூகத்தில் சமத்துவம் பேணுவதற்குப் பாடுபட்ட சமூகச் சிற்பிகளின் வாழ்க்கைச் செய்திகளைத் திரட்டி வாழ்க்கைக் குறிப்பு தயாரியுங்கள். அவற்றைத் தொழில் நுட்பங்களின் உதவியுடன் ஆவணப்படம் உருவாக்குங்கள்.

- 'மலரட்டும் மனிதம்' என்னும் தலைப்பில் கவிதை எழுதுங்கள்.



# அன்பே அறம்



## மூதுரை

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் –அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி–உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல் வாரும் உண்டு

– ஔவையார்

**நூற்குறிப்பு :** பழமையான அறக்கருத்துகளை உடையதால் இந்நூல் மூதுரை (முதுமை + உரை) என்று அழைக்கப்படுகிறது. இந்நூலுக்கு வாக்குண்டாம் என்னும் சிறப்புப் பெயரும் உள்ளது. இந்நூலைச் சோழர் காலத்தில் வாழ்ந்த ஔவையார் இற்றியுள்ளார். இவர் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்ற அற நூல்களையும் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலின் மையக்கருத்தைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- பாடலில் பயின்று வரும் அணிநயத்தைக் கண்டறிந்து விளக்குங்கள்.
- பிறருக்குத் துன்பம் ஏற்பட்டபோது தகுந்த நேரத்தில் நீங்கள் உதவி செய்திருப்பீர்கள் அல்லவா? அந்த நிகழ்வை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.

## கம்பரில் சகோதரத்துவம்



உடன் பிறந்த சகோதரரிடையே பாசத்தைக் காட்டிய கம்பர், காப்பியத் தலைவன் இராமன், உடன்பிறவாத மூவரைச் சகோதரராக ஏற்று அன்பு செய்த உயர்நிலையையும் உணர்த்தி, அவன் வழியில் உலக மக்கள் அனைவரும் ஒருவரையொருவர் சகோதரர்களாக அன்பு செய்து வாழ வேண்டும் என்பதையும் நமக்கு அறிவுறுத்துகிறார். அதனை இனி விளக்கமாகக் காண்போம்.

தம்பியர் மூவரோடு வாழ்ந்த இராமன் சிற்றன்னை கைகேயியின் வரத்தினால் காட்டிற்குச் செல்கிறான். செல்கையில் கங்கைக் கரையில் குகன் என்ற வேட்டுவனையும் கிட்கிந்தையில் சுக்ரீவன் என்ற குரங்கினத் தலைவனையும் இலங்கையில் வீடணன் என்ற அரக்கர் குலத்தவனையும் தன் தம்பிகளாக ஏற்றுக் கொண்டான்.

வீடணனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டபோது அவனிடம் இராமன் மொழிவதாகக் கம்பன் தரும் அற்புதப் பாடல் இதோ:

"குகனோடும் ஐவர் ஆனேம்முன்பு;
பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை."

இப்பாடல் இராமபிரானின் உயர்ந்த உள்ளத்தை மட்டுமின்றி, அவனது குடும்பத்தார் அனைவரது உயர்ந்த உள்ளத்தையும் நமக்குக் காட்டுவதாக அமைகின்றது. மேலும் இப்பாடல் கம்பனுடைய கவிதா விலாசத்திற்குச் சான்றாகப் பல இலக்கிய நயங்களுடனும் உத்திகளுடனும் அமைந்துள்ள

பாடல் என்பதை எண்ணி எண்ணி வியப்புறுகிறோம். அந்நயங்களை விரிப்பின் பெருகுமாதலால், அவற்றை விடுத்து, இங்குச் சிறப்பாக எடுத்துக் கொண்ட பொருள் மேற் செல்வோம்.

நட்பு என்பது, இருவர் சேர்ந்து பழகும்போது அவ்விருவர் அளவில் மட்டுமே நின்று விடுவதும் உண்டு. ஆனால் அவ்விரு குடும்பத்தையும் உறவு நிலைக்குக் கொண்டு வருவது நட்பின் உயர்ந்த நிலையாகும். இராமனிடம் அவ்வுயர்ந்த நிலையையே நாம் காணுகிறோம்.

கங்கைக் கரையில் "தீராக் காதலனாக யாதினும் இனிய நண்பனாகக் குகனைச் சந்தித்த இராமன் அவனது களங்கமற்ற உயர்ந்த அன்பில் கட்டுண்டான்"

என் உயிர் அனையாய் நீ;
இளவல் உன் இளையான்; இந்
நன்னுதலாள் நின்கேள்;
நளிர் கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது; நான் உன் உரிமையின் உளென்"

என்று கூறி உறவு கொள்கிறான். குகனைத் தன் தோழனாக, உடன் பிறந்தானாக ஏற்றுக் கொண்டதேயன்றி, அங்கிருந்த தன் தம்பி இலக்குவனைக் குகனுக்குத் தம்பியாக்குகின்றான். தன் மனைவி சீதையைக் குகனுக்குக் கொழுந்தியாக்குகின்றான். தன் நாட்டையே அக்குகனுக்கு உரிமையாக்குகின்றான்.

அருகில் இருந்த இலக்குவனை மட்டுமன்றி அயோத்தியில் இருந்த பரதனையும் சத்ருகனையும் அக்குகனுக்குச் சகோதரர்களாக்கி, உடன் பிறந்தார் நால்வர் என்ற கணக்கை மாற்றி ஐவர் என ஆக்குகின்றான்.

"முன்பு உளெம், ஒரு நால்வோம்;
முடிவு உளது என உன்னா
அன்பு உள இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனாம்"

என்பது இராமன் வாக்கு.

இராமன் தன் உயர்ந்த உள்ளத்தால் குகனைத் தன் சுற்றத்தார் அனைவர்க்கும் உறவினன் எனக் கூறலாம். ஆனால் இராமனின் சுற்றத்தாரும் அதே மன நிலையில் குகனைத் தம் சொந்தமாக எண்ணி மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார்கள் என்பதையும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளதைப் பார்க்கும்போதுதான் இராமனின் குடும்பத்தார் அனைவரின் உயர்ந்த உள்ளத்தையும் நாம் கண்டு பெருமை கொள்ள முடிகின்றது.

– புலவர் வ. ஞானப்பிரகாசம்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் திருமுறைகளில் திரு ஐந்து எழுத்து, திருத்தில்லை நீரோட்டக யமக அந்நாதி, கடலூரில் வள்ளலார் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- குடியரசு தினத்தன்று உங்கள் பள்ளிக் காலைக்கூட்டத்தில் வாசிப்பதற்கு சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- சமுதாயத்தில் சகோதரத்துவச் சிந்தனையை வளர்க்கும் விதமாக உங்கள் பள்ளியில் 'சகோதரத்துவம்' என்ற நாடகம் நடைபெற உள்ளது. இதைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டுச் சுவரொட்டி தயாரியுங்கள்.
- 'நளிர்' என்னும் சொல்லிற்கு இணையான பிற சொற்களை அகராதியின் துணை கொண்டு திரட்டுங்கள்.
- இன்றையச் சமூகத்தில் சகோதரத்துவம் குறைந்து வருகிறதா? / பெருகிவருகிறதா? என்ற தலைப்பில் தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக நடத்தும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஒரு அணி சார்பாகப் பேசுவதற்குப் பட்டிமன்ற உரை தயார் செய்யுங்கள்.

## நாம் அனைவரும் சகோதரர்களே!



ஒரு முறை விவேகானந்தர், அகண்டானந்தருடன் இந்தியாவெங்கும் பயணம் செய்து கொண்டிருந்தார். இருவரும் அல்மோராவிற்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். அல்மோராவிற்கு இரண்டு மைல் முன்னதாக இடுகாடு ஒன்று இருந்தது. அந்த இடத்தை அடைந்த போது பசி தாகத்தின் காரணமாக விவேகானந்தர் மயங்கி விழும் நிலைமைக்கு வந்து விட்டார். அவரை அங்கே அமரச் செய்து விட்டுப் பக்கத்தில் எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று பார்ப்பதற்காக அகண்டானந்தர் சென்றார். அந்த இடுகாட்டைக் கண்காணித்து வரும் ஜுல்பிகர் அலி என்ற பக்கீர் இடுகாட்டிற்கு அருகில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். உணவு என்று அவரிடம் இருந்தது ஒரு வெள்ளரிக்காய் மட்டுமே. விவேகானந்தரின் நிலைமையைக் கண்ட அவர் ஓடிச்சென்று அந்த வெள்ளரிக் காயை அவருக்குக் கொடுத்தார். மிகவும் பலவீனமாக இருந்த அவரால் அதைக் கையில் வாங்கி சாப்பிடக்கூட முடியவில்லை. எனவே அதனை வாயில் துண்டு

துண்டாக்கிப் போடும்படி கேட்டுக் கொண்டார் விவேகானந்தர்.

அதற்கு அந்த பக்கீர் "சுவாமிகளே! நான் ஒரு முஸ்லீம்" என்றார்.

"அதனால் என்ன? நாம் அனைவரும் சகோதரர்கள் அல்லவா?" என்று புன்முறுவலுடன் கேட்டார்.

பக்கீர் அவருக்கு வெள்ளரிக்காயை ஊட்டினார். விவேகானந்தர் களைப்பு நீங்கினார். அந்த மனிதர் உண்மையிலேயே என் உயிரைக் காப்பாற்றினார். அது போல் என் வாழ்நாளில் எப்போதும் நான் களைப்புற்றதில்லை என்று பின்னாளில் விவேகானந்தர் கூறினார்.

பின்னாளில் மேலை நாடுகளின் வெற்றிக்குப் பிறகு விவேகானந்தர் ஒரு முறை அல்மோராவிற்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்குச் சிறப்பான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. வரவேற்புகளின் போது அந்த பக்கீர் ஒரு ஓரமாக நின்றிருந்தார். அவர் விவேகானந்தரை இன்னார்

### இரு நாடுகள்; இரு வீரர்கள் ; இரு அம்மாக்கள்!

நீரஜ் சோப்ராவும் அர்ஷத் நதீமும் எல்லைகள் கடந்த நண்பர்கள் மட்டுமல்லாது சகோதார்களைப்போலப் பழகி வந்தனர்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று பாடினார் கணியன் பூங்குன்றனார். அதன் பொருள், "எல்லா ஊரும் எங்கள் ஊரே எல்லா மக்களும் எங்கள் உறவினர்களே" என்பதுதான். இன்றளவும் உலக ஒற்றுமையை வலியுறுத்தும் போதெல்லாம் அந்த வரிகள்தான் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. அந்தப் பாடலின் வரிகளை இப்போது இந்தியா பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஈட்டி எறிதல் வீரர்கள் இருவரும் அவர்களின் அம்மாக்களும் உயிர்பெறச் செய்துவிட்டனர். விளையாட்டுக்குச் சாதி, மதம், இனம் மட்டுமல்ல நாடுகள் என்ற வேறுபாடும் கிடையாது என்பதை இவர்கள் உலகத்துக்கே எடுத்துக்காட்டிவிட்டனர்.

இப்போது ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்துவிட்டது. கடந்த முறை ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உள்பட 7 பதக்கங்களை வென்றிருந்தது. இந்த முறை இரட்டை இலக்கத்தில் பதக்கம் கிடைக்கும் என்று உறுதியாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பல விளையாட்டுகளில் பதக்கக் கனவு பறிபோய்விட்டது. ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் இதுவரை 90 மீட்டர் தூரத்தைத் தாண்டி ஈட்டி எறிந்ததில்லை. ஆனால், அவரை எதிர்த்து இறுதிப்போட்டியில் விளையாடிய பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அர்ஷத் நதிம் 92.97 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து புதிய சாதனை படைத்ததோடு தங்கப் பதக்கத்தையும் வென்றார்.

இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 89.45 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து, முதல் வெள்ளிப்பதக்கத்தை நாட்டுக்குப் பெற்றுத்தந்தார். நீரஜ் சோப்ராவும் அர்ஷத் நதீமும் எல்லைகள் கடந்த நண்பர்கள் மட்டுமல்லாது, சகோதரர்களைப் போல பழகிவந்தனர், கடந்த ஆண்டு நடந்த உலக தடகளப் போட்டியில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தங்கம், அர்ஷத் நதீம் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றனர். அப்போது, நீரஜ் சோப்ரா இந்திய தேசியக் கொடியைக் கைகளில் விரித்து நின்றபோது, அவருடன் சேர்ந்து நின்றவர், அர்ஷத் நதீம். 5 மாதங்களுக்கு முன்பு ஒலிம்பிக்

போட்டிக்கான பயிற்சிக்கு ஈட்டி வாங்கக்கூட பணம் இல்லாமல் அர்ஷத் நதீம் தவித்தபோது, நீரஜ் சோப்ரா ஆதரவுக் குரல்கொடுத்து, "அவருக்குப் பாகிஸ்தான் அரசாங்கமும் நிறுவனங்களும் நிதியுதவி வழங்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

இப்போது நீரஜ் சோப்ராவின் தாயார் சரோஜ் தேவி, "தங்கம் வென்ற அர்ஷத் நதீமும் என் மகனைப் போன்றவர்தான்" என்று கூறியது, இருநாட்டு விளையாட்டு ரசிகர்களை நெகிழச் செய்தது. இதுபோல், அர்ஷத் நதீமின் தாயார் ரஜியா பர்வீனும், "நீரஜும் என் மகன்தான். அவரும் நிறைய பதக்கங்களை வெல்ல வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். அவர் என் மகனுக்கு நண்பர் மட்டுமல்ல சகோதரரும்கூட. நீரஜ் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும் என்று அன்புடன் அழைக்கிறேன்" என்று பாசத்துடன் கூறியது, தாய்மையின் உன்னதத்தைப் பறை சாற்றுகிறது. களத்தில்தான் இந்தியா–பாகிஸ்தான் என்று எதிர் எதிர் துருவங்களாக இருந்தாலும், களத்துக்கு வெளியே பாசமுள்ள சகோதரர்கள் என்பதை இரு வீரர்களும், அவர்களின் அம்மாக்களும் உணர்த்தியது மனிதநேயத்தின் வெளிப்பாடு.

என்று அடையாளம் காணவில்லை. ஆனால் விவேகானந்தர் அவரைப் புரிந்து கொண்டு கூட்டத்தையோ பரபரப்பையோ பொருட்படுத்தாமல் நேராக அவரிடம் சென்று அவரைக் கட்டியணைத்துக் கொண்டார். அருகில் நின்றவர்களிடம் அவரைப் பற்றி நன்றியுணர்வுடன் கூறி அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

– மீ. ச. விவேக்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தமிழ் ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஆவார். 'ஒரு ஊருலே' என்னும் நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவைப் பற்றிய விவரங்களைத் திரட்டி தன் விவரப்பட்டியல் தயாரியுங்கள்.
- பாகிஸ்தான் நாட்டு வீரர் அர்ஷத் நதீமிடம் சகோதர மனப்பான்மையோடு பழகி வந்த நீரஜ் சோப்ராவைப் பாராட்டி, பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.
- 'சில துக்ககரமான செய்திகளை நல்ல வார்த்தைகளாற் குறிப்பிடுவதை மங்கல வழக்கு' என்பர். இறந்தார் என்பதை காலமானார் என்று கூறுகிறோம். அதுபோல் பாடப் பகுதியில் பயின்று வந்த சொற்களைக் கண்டறிந்து வழக்கிலுள்ள பிற சொற்களைத் திரட்டி எழுதுங்கள்.



# ஒருயிராய்



## ஒற்றுமை

நீதியே முடிவில் வெல்லும்
நிச்சயமாய் நம்பு நாட்டுக்
கொற்றுமையே தெம்பு – கெட்ட
நினைவு கொண்டு தாக்கும் பகைவர்
நெருப்பில் வீழும் கொம்பு!

மறுத்துக்கொண் டிருப்பதுவே திறமை யன்று!
மனங்கலந்தால் குற்றங்கள் குறையும் நாடு
சிறப்புற்றுச் செழித்தோங்க வேண்டு மாயின்
தேசிய ஒருமைப்பாட் டுணர்ச்சி வேண்டும்.

காய்ந்தமனம் கொண்டோரே, சமுதா யத்தில்
கண்டபடி வேற்றுமையை விளைவிக் கின்றார்.
சாந்தகுணம், பெருந்தன்மை குறையும் நாட்டில்
சமுதாய ஒற்றுமையும் குறைந்து போகும்.

– சுரதா

**ஆசிரியர் குறிப்பு :** இராசகோபாலன் என்னும் இயற்பெயர் கொண்ட சுரதா என்பவர் பாரதிதாசன் மீதுள்ள பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டார். அதனைச் சுருக்கி சுரதா என்ற பெயரில் பல மரபுக்கவிதைகளை எழுதியுள்ளார். உவமைக் கவிஞர் என்று அனைவராலும் பாராட்டப்பெற்றவர். தேன் மழை, எச்சில் இரவு, புகழ் மாலை, மங்கையர்க்கரசி போன்றவை இவரின் தலைசிறந்த படைப்புகள்.

**செயல்பாடுகள்**

- "காய்ந்தமனம் கொண்டோரே, சமுதா யத்தில்
  கண்டபடி வேற்றுமையை விளைவிக் கின்றார்.
  சாந்தகுணம், பெருந்தன்மை குறையும் நாட்டில்
  சமுதாய ஒற்றுமையும் குறைந்து போகும்"

  இக்கவிதை வரிகள் உணர்த்தும் கருத்தினைக் கலந்துரையாடி விமர்சனக் குறிப்பு தயாரியுங்கள்.
- குடியரசுதினத்தன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் காலைக்கூட்டத்தில் பேசுவதற்காக 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்ற தலைப்பில் சொற்பொழிவு தயாரியுங்கள்.
- 'தனிமரம் தோப்பாகாது' என்ற பழமொழிக்கு ஏற்பக் கதை எழுதுங்கள்.

## போரைத் தடுத்த புலவர்



சோழன் நலங்கிள்ளியும், சோழன் நெடுங்கிள்ளியும் ஒரு குடியில் பிறந்தவர்கள். ஆனால் வேறு வேறு நாடுகளை ஆட்சி செய்து வந்தார்கள். இவ்விருவர்க்கிடையேயும் ஒருகால் பகைமை ஏற்பட்டு விட்டது. பகைமையின் பண்பு போரை உண்டாக்குதல்தானே! இருவருக்கு மிடையே ஏற்பட்ட போரில், தொடக்கத்தில் நெடுங்கிள்ளி ஆவூர்க் கூற்றத்தைக் கைப்பற்றி ஆவூரில் தங்கினான். ஆவூர் நலங்கிள்ளிக்குரியது. ஆவூர்க் கூற்றம் என்பது திருக்கருகாவூர், திருவவளிவநல்லூர் ஆகிய ஊர்களைக்கொண்டது. நலங்கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் போருக்கு எழுந்து ஆவூரை வென்று மீண்டும் அதனைத் தனதாக்கிக் கொண்டான். அங்கிருந்து தோற்றோடிய நெடுங்கிள்ளி தனது நகராகிய உறையூரில் தங்கினான். ஆத்திரம் கொண்ட நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைத் தொடர்ந்து சென்று உறையூரைத் தாக்கினான். நெடுங்கிள்ளி தானே வலிய போரை ஆரம்பித்தான். ஆகவே அவனை அழித்தே தீர்வது என்று வஞ்சினம் கொண்டுவிட்டான் நலங்கிள்ளி.

உறையூரைச் சூழ்ந்துகொண்ட நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிடும் வலிமையற்று ஒடுங்கிக் கிடந்தான் நெடுங்கிள்ளி. இந்தச் சேதியறிந்த கோவூர்கிழார் எனும் புலவரின் மனம் மிகவும் வருந்தியது.

கோவூர் கிழார், தொண்டை நாட்டிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே கோவூர் என்ற ஊரிலே பிறந்தவர். 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்பார்கள். எனவே, சான்றோர்க்குரிய அருங்குணங்கள் நிறையப் பெற்றிருந்தார். வாழப் பிறந்த உயிர்கள் பகைமை கொண்டு சண்டையிட்டு வீணே மடிந்து வாழ்க்கையிழப்பதை எண்ணி எண்ணி அவர் வருந்தினார். போரைத் தடுத்து அமைதி வழியிலே உலகை வாழவைக்கத் தம்மாலியன்ற மட்டில் அவர் உழைத்து வந்தார். ஆகவே, புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்ட நலங்கிள்ளிக்கும், ஆவூர்க்கோட்டைக்குரியவனாய் ஆண்டிருந்த நெடுங் கிள்ளிக்கும் இடையே போர் எழக் காரணமென்ன என்பது பற்றிச் சிந்தித்தார்.

உறையூரை ஆண்டிருந்த அரசன் இறந்துவிட்டான். அவ்வாட்சியைக் கைப்பற்றுவதில் அரசர்களுக்குள்ளே போட்டி ஏற்பட்டது. உறையூரைத் தானே கைப்பற்றி ஆள எண்ணினான் நெடுங்கிள்ளி, அதைத் தனதாக்கிக் கொள்ள விரும்பினான் நலங்கிள்ளி. இதுதான் காரணம் இருவருக்குமிடையே போர் எழ.

போரிட்டுக்கொண்டிருந்த இருவரும் சோழர் குடியைச் சேர்ந்தவர்கள். இதில் எவர் தோற்பினும் சோழர் குடி தோற்றதாகத்தான் பொருள். ஒரே குடியிற் பிறந்தவர்களே இப்படி ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு அமைதியழித்துக் கிடப்பது அழகாகுமா? ஆகவே கோவூர் கிழார் நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் தனித்தனியே கண்டார்.

"சோழ மன்னா! உன்னோடு போர் செய்பவன் அணிவதும் ஆத்திமாலை. நீ அணிவதும் ஆத்திமாலை. இருவரும் ஒரே மாலையை அணியும் ஒரே குடியில் பிறந்த சோழ மன்னர்கள். இதில் ஒருவர் தோற்பினும், சோழர் குடியே தோற்றதென்ற இழிவு தானே ஏற்படும். ஏனெனில் போரில் ஒருவர் தானே வெற்றி காண முடியும். இருவரும் வெல்வது என்பது எவ்வாறு முடியும்? ஆகவே நீங்கள் உங்கள் குலப் பெருமையைக் குறைக்கும் இந்த ஈனத்தனமான போரை நிறுத்துங்கள். நீங்கள் தொடர்ந்து போர் செய்துகொண்டிருந்தால் பகைவர் இகழ்ந்து தூற்றுவர்: உங்கள் பரம்பரைப் புகழுக்கும் மாசு ஏற்படும்" என்று அறிவுரை கூறினார்.

நல்லிசைப் புலவரான கோவூர் கிழாரின் அறிவுரையை ஏற்று இருவரும் போரை நிறுத்திவிட்டனர்.

போரை நிறுத்திய புலவர் கோவூர் கிழாரின் புகழ் இந்தப் பூமியில் என்றென்றும் வாழ்வதாகுக! அறிவுடையோர் அமைதியே விரும்புவார். புல்லர்தாம் போரை விரும்புவார்.

போர் ஒழிக! அமைதி ஓங்குக !

– சரசுவதி அமுதன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் கொன்றைவேந்தன் நீதிக்கதைகள், ஊரைக் காத்த உத்தமன், புலவர் புகழ் போன்ற நூற்களைப் படைத்துள்ளார்.

**செயல்பாடுகள்**

- "ஒரே குடியிற் பிறந்தவர்களே இப்படி ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு அமைதியிழந்துக் கிடப்பது அழகாகுமா?" என்ற புலவரின் கூற்றினைக் குழுவாகக் கலந்துரையாடி மையக்கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- போரைத் தடுத்த புலவர் கோவூர்கிழாரின் பண்புநலன்களை எழுதுங்கள்.
- 'ஒற்றுமையே பலம்' என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

## தோல்வியைத் துரத்துவோம்

**காட்சி–1**

**உறுப்பினர்கள்: சுடர்வண்ணன், சுந்தரவதனம், திருநம்பி**

**இடம் : வீட்டு முற்றம்.**

சுடர் : என்னடா சுந்தரவதனம், நேற்று திருநம்பி ஐயா வீட்டுக்குச் சென்றாயா?

சுந்த : சென்றேன் சுடர்வண்ணா, ஐயா முகம் வாடித்தான் இருந்தது! காரணம் கேட்டேன். சமயம் வரும்போது தெரிவிப்பதாகச் சொன்னார்கள்.

சுடர் : சமயம் எப்போதுடா வரும்? நம் ஊரில் கோயில் தேர் இழுக்க முடியவில்லையாமே?

சுந்த : ஆமாம்டா! திருவிழா அன்றே தேர் கோயிலுக்குத் திரும்பி வந்துவிடும். இந்த ஆண்டு ஏனோ தெரியவில்லை. எல்லோரும் தேரை இழுக்க முடியவில்லை என்கிறார்கள்.

சுடர் : இப்போது முடியாது என்று சொல்கிறார்களே! இவர்கள்தானே சென்ற ஆண்டு இழுத்தார்கள். அதற்கு முந்திய ஆண்டும் இழுத்தார்கள்.

**ஆகுபெயரின் வகைகள்**

மாணவர்கள் : வணக்கம் ஐயா!

ஆசிரியர் : வணக்கம். ஆகுபெயர் குறித்து நாம் முன் வகுப்பில் படித்தோம் அல்லவா! இன்று ஆகுபெயரின் வகைகளைக் குறித்துக் கற்போமா?

மாணவர்கள் : சரி ஐயா!

ஆசிரியர் : ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

மாணவர்கள் : பதினாறா?

ஆசிரியர் : பதினாறு எனப் பயப்படத் தேவையில்லை, ஒன்றைப் படித்தாலே போதும் பிற ஆகுபெயர்களும் அதுபோலவே வரும்.

மாணவர்கள் : சரி ஐயா! இந்தப் பதினாறு ஆகு பெயர்களையும் நாம் இன்று படிக்கிறோமா ஐயா!

ஆசிரியர் : முதல் ஆறு வகை ஆகுபெயர்களை நாம் இந்த வகுப்பில் கற்போம். பிறவற்றை உயர் வகுப்பில் கற்கலாம்.

மாணவர்கள் : சரி ஐயா! எடுத்துக்காட்டுகளுடன் வகைகளைத் தெளிவுபடுத்துங்களேன்.

ஆசிரியர் : மல்லிகை சூடிய மங்கை – இதில் மல்லிகை என்ற செடியைச் சுட்டாமல் பூவைக் குறிக்கிறது எனவே இது (1) **பொருளாகுபெயர்.**

சுந்த : இதில் என்னவோ இரகசியம் இருக்கிறதுடா! அதனால்தான் தேரை இழுக்க முடியவில்லை என்கிறார்கள். (திருநம்பி வருகிறார்) அதோ! திருநம்பி வருகிறார்டா!

சுடர் : ஐயா வணக்கம்!

சுந்த : ஐயா வணக்கம்! வாருங்கள்! வாருங்கள்!

திரு : தம்பிகளே! எப்படி இருக்கிறீர்கள்?

சுடர் : வாட்டத்தோடு இருக்கிறோம் ஐயா!

திரு : எதற்காக வாட்டத்தோடு இருக்கிறீர்கள்?

சுந்த : எங்கள் ஐயா வாட்டத்தோடு இருக்கிறார். அதனால் நாங்களும் வாட்டத்தோடு இருக்கிறோம்.

திரு : அதுதான் நம் ஊரைப் பற்றிய செய்தி. தேர் இழுக்கப்படாமல் நடுத்தெருவில் நின்றுகொண்டு இருக்கிறதே! அந்தத் துயரமான செய்தி!

சுடர் : ஐயா! நீங்கள் வருவதற்கு முன்பு நாங்கள் அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டு இருந்தோம்!

சுந்த : அதில் ஏதோ இரகசியம் இருப்பதாக எங்களுக்குத் தெரிகிறது!

திரு : என்ன இரகசியம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்! தேரை இழுக்க முடியவில்லை என்பது இந்த ஊரினுடைய தோல்வி. இந்த ஊர் மக்களுடைய தோல்வி. இந்த ஊரில் வாழும் ஒவ்வொருவருடயவும் தோல்வி.

சுடர் : ஆமாம் ஐயா! அதை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். அந்தத் தோல்விக்குக் காரணம் என்ன ஐயா?

சுந்த : தேரை இழுத்து வெற்றி பெறுவது எப்படி ஐயா?

திரு : நீங்களே சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் புறப்படுகிறேன். பிறகு சந்திப்போம்!

இளங்கோ : முக்கனிகளில் எனக்குப் பிடித்தது மா. இப்படித்தானே ஐயா?

ஆசிரியர் : மிக அருமையாகச் சொன்னாய் இளங்கோ. அவ்வாறே இந்தியா வென்றது – இதில் இந்தியா என்பது இடத்தைக் குறிக்காமல் விளையாடிய அணியினரைக் குறித்தது. எனவே இது (2) **இடவாகுபெயர்.**

சித்திரை வந்தாள் – இத்தொடரில் சித்திரை என்பது காலம். ஆனால் இது காலத்தைக் குறிக்காமல் சித்திரையில் பிறந்தப் பெண்ணுக்கு ஆகி வந்தது. எனவே இது (3) **காலவாகுபெயர்.**

தலைக்குப் பத்து ரூபாய் கொடு – இதில் தலை என்னும் சினை அதோடு தொடர்புடைய மனிதனைக் குறிப்பதால் இது (4) **சினையாகுபெயர்.**

வீட்டிற்கு வெள்ளை அடித்தான் – வெள்ளை என்னும் நிறத்தின் பெயர் அந்நிறத்தையுடைய சுண்ணாம்பிற்கு ஆகி வந்தது. எனவே இது (5) **பண்பாகுபெயர்.**

வற்றல் வாங்கி வந்தாள் – வற்றல் என்பது ஒரு தொழில். அத்தொழிலோடு தொடர்புடைய பொருளைக் குறிப்பதால் இது (6) **தொழிலாகுபெயர்** ஆகும்.

இதைப் போன்று மேலும் சில உதாரணங்கள் திரட்டலாமல்லவா?

மாணவர்கள் : நிச்சயமாக திரட்டுகிறோம் ஐயா! மிக்க நன்றி.

## காட்சி – 2

**உறுப்பினர்கள் : பொன்மலர், சுடர்வண்ணன், சுந்தரவதனம்**

**இடம் : வீதி**

சுடர் : பொன்மலர் வா! வா! நம் திருநம்பி ஐயா எங்களுக்கு ஒரு கட்டளை இட்டு இருக்கிறார். நம் ஊர் தேரை இழுத்து வெற்றி பெறுவது எப்படி? இதைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரச்சொல்லி இருக்கிறார்.

பொன் : அது எப்படி நம்மால் முடியும்? இது ஊர் விவகாரம் ஆயிற்றே?

சுந்த : உன்னைத் தேரை இழுக்கவா சொல்கிறார்கள்? மனத்தால் எண்ணிப் பார்க்கத்தானே சொல்கிறார்கள்

பொன் : நான் எண்ணிப் பார்க்கத் தயார்! ஆனால் எனக்கு எண்ணத்தான் தெரியவில்லை.

சுடர் : நாம் சிறியவர்கள். நமக்குத் தெரியாததைப் பெரியவர்களிடந்தானே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்?

பொன் : ஆமாம் ! இதைப் போய் எப்படிக் கேட்பது?

சுடர் : உனக்கு முன்பே நான் கேட்டுவிட்டேன்.

பொன் : என்ன பதில் தெரிந்து கொண்டாய்?

சுடர் : நம் ஊரில் உள்ள மாரியப்பன் தான் இதற்குக் காரணம் என்று எங்கள் தாத்தா சொல்லுகிறார்.

பொன் : யார்? எங்கள் மாமா மாரியப்பனா?

சுந்த : ஆமாம்! ஆமாம்! உங்கள் மாமா மாரியப்பனேதான்! அவருக்கு ஊரில் யாரும் மரியாதை செய்வது இல்லையாம் அதனால்தான் இப்படித் தேர் ஓடாமல் இருக்கச் செய்கிறாராம்!

பொன் : இல்லை! இல்லை! எங்கள் மாமா அப்படிச் செய்யக்கூடியவர் இல்லை. அவர் ஒருநாளும் சூழ்ச்சி செய்யமாட்டார். நான் இப்போதே அவரை நேரில் போய்க் கேட்கிறேன்.

(பொன்மலர் போகிறாள்)

சுடர் : இவள் போய் மாரியப்பனைக் கேட்கட்டும், மாரியப்பன் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

சுந்த : நாம் எல்லோரும் சேர்ந்து நம் ஊரின் தோல்வியைத் துரத்துவோம்!

சுடர் : நிச்சயமாகத் துரத்தியே ஆகவேண்டும்.

## காட்சி – 3

**உறுப்பினர்கள் : பொன்மலர், மாரிமுத்து**

**இடம்: மாரிமுத்து வீடு**

பொன் : மாமா! மாமா! ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?

மாரி : இன்னும் நான் பேசவேண்டுமா? உன் தம்பி, தங்கைகள், மற்ற பிள்ளைகள், எல்லாரும் சேர்ந்து என்னை நையாண்டி செய்கிறார்கள். 'தோல்வியைத் துரத்துவோம்' என்று சொல்லி என்னைத் துரத்துகிறார்கள்.

பொன் : (சிரிக்கிறாள்) அப்படியா?

மாரி : உங்களுக்கு எல்லாம் என்னைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறது! இல்லையா?

பொன் : கோபித்துக் கொள்ளாதீர்கள் மாமா! நம் ஊரில் தேர் ஓடாமல் இருப்பதற்கு நீங்கள்தான் காரணமாம்!

மாரி : மீசைவைத்த மாரிமுத்து–உன்மேல்
ஆசைவைத்தோம் மாரிமுத்து!
காசுவைத்த மாரிமுத்து–இன்று
மாசுவைத்த மாரிமுத்து!

இப்படி எல்லாம் என்னைப் பார்த்துச் சிறுவர்கள் பாடுகிறார்கள். மாரிமுத்து பணக்காரன், கையில் காசு நிரம்ப வைத்துள்ளான். இதைச் சொல்லிவிட்டு மாசுவைத்த மாரிமுத்து என்கிறார்களே? நான் என்ன மாசு வைத்தேன். என்ன குற்றம் செய்தேன்? இது எனக்கு அவமானமாக இருக்கிறதே! தேர் ஓடவில்லை என்றால் அதற்கு நானா பொறுப்பு?

பொன் : தோல்வி எங்கிருந்தாலும் அதைத் துரத்தவேண்டும். யாருக்கு வந்தாலும் துரத்தவேண்டும். தோல்வியைத் துரத்துவோம் என்று சொல்லி உங்களைத் துரத்திடக் காரணம் என்ன தெரியுமா?

மாரி : என்ன காரணம்?

பொன் : நீங்கள் தோல்வியைத் துரத்தவேண்டும் என்பதற்காகத்தான் சிறுவர்கள் உங்களைத் துரத்துகிறார்கள். தேரை இழுக்க முடியாமல் ஊருக்கு வந்த தோல்வியைத் துரத்த நீங்கள்தான் முயற்சி செய்யவேண்டும்! முயற்சி செய்தால் உங்கள்மீது உள்ள பழி நீங்கும்.

மாரி : அப்படியே முயற்சி செய்கிறேன்!

## காட்சி – 4

**உறுப்பினர்கள் : பொன்மலர், சுடர்வண்ணன், சுந்தரவதனம், திருநம்பி**

**இடம் : வீட்டு முற்றம்**

சுடர் : வா பொன்மலர்! உங்கள் மாமாவைக் கேட்டாயா?

பொன் : கேட்டேன்! கேட்டேன்! நன்றாகக் கேட்டேன்! எங்கள் மாமா எந்தச் சூழ்ச்சியும் செய்யவில்லை. அதற்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லையாம். அவர் பெயரை யாரோ பொய்யாகச் சொல்லி இருக்கிறார்கள்.

சுடர் : இல்லை! இல்லை! உங்கள் மாமாதான் காரணம். நம் ஊரில் பலபேர் பேசிக் கொள்வதை நான் கேட்டேன்.

பொன் : நம் ஊர் தேர் ஓடுவதற்கு என் மாமாவையே முயற்சி செய்யச் சொல்லி இருக்கிறேன். அவரும் ஒப்புக்கொண்டுள்ளார். அவரே முன் நின்று தேரை இழுத்தால் அவர் மீது இருக்கும் பழி மறையும் அல்லவா!

சுந்த : நல்லயோசனை பொன்மலர்! அப்படியே செய்யட்டும். உன் மாமா முயற்சி செய்தால் நிச்சயமாகத் தேர் ஓடும்.

(திருநம்பி வருகிறார்)

மூவரும் : ஐயா வணக்கம்! வருக! வருக!

திரு : என்ன பொன்மலர், இன்று மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறாய்? இன்று ஏதேனும் வெற்றிச் செய்திகள் உண்டா?

பொன் : உண்டு ஐயா உண்டு! நம் ஊரில் தேர் ஓடுவதற்கு என்னால் ஆன முயற்சி செய்துள்ளேன். அந்த முயற்சி வெற்றி தரும் என்று நம்புகிறேன்.

திரு : அப்படியா? மகிழ்ச்சி. தோல்வி என்பது தனிப்பட்டவர்களுக்கு வரக்கூடாது என்பதல்ல, நாம் வாழும் ஊருக்கும் தோல்வி வரக்கூடாது. அப்படி வந்தால் அந்தத் தோல்வியை எல்லோரும் ஒன்று சேர்ந்து துரத்தவேண்டும்.

சுந்த : தோல்வியின் உண்மையான காரணம்தான் என்னய்யா? வழக்கமாகத் தேர் இழுத்து வந்தவர்கள் இந்த ஆண்டு ஏன் இழுக்கவில்லை?

திரு : அந்தக் காரணத்தை அவசியம் சொல்கிறேன் தெரிந்து கொள்ளுங்கள்! தேரை முன்னால் சில பேர் இழுக்கிறார்கள் பின்னால் சில பேர் தள்ளுகிறார்கள். இழுப்பவர்களுக்கும் தள்ளுகிறவர்களுக்கும் இடையிலே ஒற்றுமையில்லை. அவர்கள் இழுத்தால் தள்ளுவோம் என்று நினைக்கிறவர்கள் ஒரு பக்கம். அவர்கள் தள்ளினால் நாம் இழுப்போம் என்று நினைக்கிறவர்கள் மறுபக்கம். பார்த்தால் எல்லோரும் கையைத் தேர்மீது வைத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் அவர்கள் மனம் தேர் மீது இல்லை! அதனால் தேர் ஓடவில்லை!

சுடர் : இந்தத் தோல்வியை நாம் துரத்தியே ஆகவேண்டும்.

சுந்த : நம் ஊரில் மட்டும் இல்லை, எந்த இடத்தில் தோல்வியைப் பார்த்தாலும் துரத்துகின்ற மனம்தான் வெற்றிக்கு வழிவகுக்கும்.

பொன் : இன்று பாருங்கள்! நம் ஊரில் தேர் ஓடப்போகிறது.

– ஆலந்தூர் மோகனரங்கன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் கவிஞர் என்ற முறையில் தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகமாகி கவிதை, கட்டுரை, நாடகம் என பலதளங்களில் தன்னை அடையாளம் காட்டியவர். மு. வரதராசனார், மீனாட்சி சுந்தரம் பிள்ளை வரலாறு, இமயம் எங்கள் காலடியில், நூலகத்தால் உயர்ந்தேன் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'தோல்வியைத் துரத்துவோம்' என்னும் நாடகத்தினை திரைக்கதையாக மாற்றி எழுதுங்கள்.
- ஆகுபெயரின் வகைகளைத் திரட்டி உதாரணங்களுடன் வரிசைப் படுத்துங்கள்.
- "சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை போன்றவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்." இக்கருத்தைச் சமூகத்தில் வளர்ப்பதற்கு மேற்கொள்ளும் வழிமுறைகளை வரிசைப்படுத்துங்கள்.
- உங்கள் பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக 'தோல்வியைத்துரத்துவோம்' என்ற நாடகம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் விதமாக அறிவிப்புத் தயார் செய்யுங்கள்.



அலகு 3

# வாழ்வு வளம் பெற



ஒருவருடைய வாழ்வாதாரத்திற்குத் தொழில் என்பது முக்கியமான ஒன்று. பல வகைத் தொழில்கள் அடங்கியிருக்கும் இச்சமூகத்தில் செய்யும் தொழிலே தெய்வம் என்று கருத வேண்டும். தொழில்களின் முக்கியத்துவத்தையும் பழங்காலத் தொழில்கள் குறித்தான அறிவையும் இலக்கியங்களில் தொழில்கள் பெறுமிடத்தையும் அறிந்து ஒழுகுதல் சிறப்பானதாகும்.

# ஏர்ப்பின்னது உலகம்



## உழவு

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்
– திருவள்ளுவர்

**ஆசிரியர் குறிப்பு :** திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரது வேறு பெயர்களாவன: தெய்வப் புலவர், நாயனார், முதற்பாவலர், பெருநாவலர், செந்நாப்போதார் போன்ற பல.

**செயல்பாடுகள்**

- 'உழவு' பற்றிய குறட்பாக்களுக்கு நூலக உதவியுடன் விளக்கம் எழுதி வகுப்பில் வெளியிடுங்கள்.
- திருக்குறளின் சிறப்புகளைத் தொகுத்துக் குறிப்பெழுதுங்கள்.
- "குறள் காட்டும் உழவின் மேன்மைகள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி வெளியிடுங்கள்.

## உழவுத் தொழில்

நிலத்தை உழுதுசெய்யும் தொழில்கள் யாவும் உழவுத் தொழிலேயாயினும், இத்தொடர் சிறப்பாக நெற்செய்கையையே குறிப்பிடுவதாயிருக்கிறது. நமக்கு உணவு இல்லையேல் உயிர் தங்கும் இவ்வுடல் இல்லை. ஆதலால் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர். இதனை "உண்டி முதற்றே உணவின் பிண்டம், உண்டி கொடுத்தோருயிர் கொடுத்தோரே" என்று முன்னையோருணர்ந்து, இதற்குக் கருவியான கமத்தொழிலை விருத்திசெய்து வந்தனர். இன்று உலகில் உள்ள மற்றைத்தொழில்களுள்ளும் இத்தொழிலே சிறந்ததாக மதிக்கப்படுகின்றது.

உழவுத் தொழிலுக்கு மிக இன்றியமையாது வேண்டப்படுவன நீர்வளமும், நிலவளமுமாகும். இவையிருக்கும் நாட்டில் உணவுப் பொருட்கள் நிறைய உண்டாக்கப்படலாம். இக்கருத்துக் கொண்டே "சோழவள நாடு சோறுடைத்து" என நீர்வள, நிலவளங்கள் சான்ற சோழநாடு வர்ணிக்கப்பட்டது. நம் நாட்டில் காலபோகமென்றும் முன்மாரி என்றும் இருபோகமாக நெற்செய்கை நடைபெறுகிறது. வயலை உழுது புழுதியாக்கி, மழைக் காலத்துக்குமுன் விதைத்துச் செய்வது முன்மாரியென்றும்; களி நிலத்தை உழுது, மிதித்துச் சேறாக்கி நெல்முளை விதைத்தோ, நெற் பயிர் நட்டோ செய்வது காலபோகமென்றும்

கூறப்படுகின்றன. விதைப்பின் பின்னர் நீர்ப்பாய்ச்சல், களை கட்டல், காத்தல் என்பன முறையே நடை பெறுகின்றன. அப்பால் கதிரீன்று விளைந்த நெற் பயிர்கள் அறுவடையாகி, போர் குவித்து, வைக்கோல் வேறு, நெல்மணி வேறு, பதர் வேறாக்கப் பெறுகின்றன. பின்பு மறுபோக விதைப்புக்கு வேண்டுவன போக மற்றைய நெல்லெல்லாம் மனித வர்க்கத்தின் உணவிலே முக்கிய பங்கைப்பெறச் செய்கின்றன.

எறும்பு முதல் யானையீறாக உள்ள சகல உயிர்களும் இத்தொழிலால் உணவுபெறுகின்றன. இத்தொழிலிடமான மருத நிலம் எக்காலத்தும் எழில் கொண்டு விளங்குவது. பசும் பயிர் நிறைந்து மரகதக் கம்பளம் போன்று விளங்கும் காலத்து வயலின் இனிய குளிர்மை கூறமுடியாதிருக்கும். நீர் மடைகளிலெழும் இன்னோசைகளும், களை பிடுங்கும் மகளிர் தொடுக்கும் பாடல்களும், விளைவு காலத்துப் புள்கடியும் ஓசையும், சூடு போடும்போது உழவர் கடாக்களை ஓட்டிப்பாடும் 'பொலி'ப்பாட்டுகளும் கேட்போருக்கு, வயலிடத்தை இசையரங்கம் என்று எண்ணச் செய்து விடும். ஆங்காங்கு நீர் நிறைந்து, தெளிந்து காணப்படும் மடுக்களும், அவற்றுட் பரந்து கிடக்கும் அல்லி, தாமரை, கொட்டி முதலிய பூக்களும், நீர் நோக்கி இரைதேடும் பறவைகளும் தம்மழகால் தெவிட்டா இன்பந்தருவன. வேலை நடைபெறும்போது சுறு சுறுப்பாகவும், சுதந்தரமாகவும் உழைக்கும் உழவர்களின் உற்சாகம் எவரையும் பரவசப்படுத்துவது. உள்ளீடு முற்றிப் பாரந்தாங்காது தலை தாழ்ந்த கதிர்களது பொன்னிறம் வயலைத் தங்கமயமாக்கிப் பார்ப்போர் மனதைத் தன் வயப்படுத்தும். இப்படியான பலவகை இயற்கை எழில் நிறைந்த சூழலில் தாம் வாழ்க்கை நடத்துவதில் உழவர்கள் பெரு மகிழ்வடைகிறார்கள்.

### வாழை மரம் தன்வரலாறு கூறல்

கல்வித் தேனை அள்ளிப்பருகச் செல்லும் அன்புத் தம்பிகளே, அன்புத்தங்கைகளே! கொஞ்சம் நில்லுங்கள்! ஓகோ! யார் பேசுவது எனச் சுற்றும் முற்றும் பார்க்கிறீர்களா? சாலை ஓரத்தில் உள்ள வேலிக்குள்ளிருந்து வாழை மரமாகிய நான் தான் பேசுகிறேன்.

மரங்களில் மிகவும் வலிமை குறைந்த மென்மையான மரம் நான். ஈரம் மிகுந்த மழை நிறைந்த வெப்பப் பகுதிகளில் நான் நன்றாகச் செழித்து வளர்கிறேன். கருங்களியும் மணலும் சேர்ந்த வண்டல் படிந்த நிலம் என் வளர்ச்சிக்குத் தகுந்தது. கடற்கரை ஊர்களிலும் வளர்கிறேன்.

என்னைப் பயிர்செய்யும் விதமே தனி. என் வேர்ப் பகுதியிலுள்ள கிழங்கிலிருந்து சிறுகன்றுகள் வெடித்து வளரும். அதனைக் கிழங்குப் பாகத்தோடு வெட்டி வேறிடத்தில் நட்டுப் பயிர் செய்வர். குலை தள்ளிய பின் நான் அழிய வேறு கன்றுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். இதனால் தான் "வாழையடி வாழையாக" என்று எங்கள் இனத்தை நீங்கள் பெருமையோடு அழைக்கிறீர்கள்.

உழவர்களுடைய வாழ்க்கை அசைவற்றது. எவர்க்கும் கட்டுப்படவேண்டாத சுதந்தர இன்பம் நிறைந்தது அவர்களுடைய தொழில். இதை நினைந்து இதன் பெருமைக்கு ஈடு வேறில்லை. 'உழவர் வைத்திருக்கும் உணவே உணவு, அதுதான் பிறர்க்கும் அறஞ் செய்தற்குரியது' என்பது நம் முன்னோர் கருத்து. இதனைப் "பகடு கடந்த கூழ் பல்லாரோடுண்க" என நாலடியார் வற்புறுத்துகிறது. இரப்போர்க்கு உணவளித்தல் தொடக்கம் மன்னர்க்கு அரசு நடத்த உதவியாதல்வரை இத்தொழில் எல்லாவற்றிலும் பங்குபெற்று முதன்மை யடைகின்றது. இப்பொருளை

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்"

என இளங்கோவடிகளும் கூறினார். மன்னர் பெருமை யெல்லாம் உழவு தொழிலிலே தங்கியிருக்கிறதென்பதைக் குறிக்கவே ஔவையார் "வரப்புயர" –என ஒரு அரசற்குக் குறித்துக் காட்டினர்.

இத்தொழிலுக்குச் செய்கையில் முதன்மை கொடுத்துக் காக்க முற்படு கிறோமில்லை. உழவர்களும், மற்றையோர்போற் கருதப்படுவதில்லை. உழுதுண்டு வாழ்வோர் பெறும் ஊதியம், தொழுதுண்டு வாழ்வோர் பெறும் ஊதியத்திலும் பல மடங்கு குறைவாக இருக்கின்றது. இக்காரணங்களால், கற்ற வாலிபர் எவரும் கமத் தொழிலைக் கருதுவதில்லை. உழவுத் தொழிலின் சிறப்புக்களைச் சொல்லாலும் செயலாலும் மற்றோர்க்குக் காட்டி, இதை இகழ்வாரை நன்னிலை சேர்த்து, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய வேண்டும். இயந்திர சாதனங்களையும், புது முறைகளையும் கையாண்டு விளைவைக் கூட்டி நிறைந்த பயனைப்பெற வழிகாட்ட வேண்டும். தரிசு நிலப்பகுதி யெல்லாம் உழவாற் தலைசிறந்து பொன்கொழிக்கும் பூமியாக எல்லோரையும் ஊக்கவேண்டும். உழவை

என் உயரம், பட்டையின் நிறம், இலையின் அளவு, குலையின் பருமன், மென்மை, நிறம், மணம், சுவை இவற்றை வைத்து எங்களைப் பலவகை இனமாகப் பகுக்கிறார்கள். மொந்தன், பச்சை வாழை, மலைவாழை, பேயன், பூவன், ரஸ்தாளி முதலியவை என் இனத்தில் சில.

நான் உங்களுக்குப் பல வகையில் பயன்படுகிறேன். என் காய்கள் கறிசமைக்க உதவுகிறது. பழம் எளியமக்களுக்கு நல்ல உணவாகும். இலையும் உணவு உண்ணப் பயன்படும். பட்டையிலிருந்து கிடைக்கும் நார் பூத்தொடுக்க உதவுகிறது. என் பூவும் பயன்படுகிறது. என்னுள்ளே இருக்கும் தண்டையும் சமைக்கலாம்.

குழந்தைகளே, என் கதையைப் பொறுமையாகக் கேட்டமைக்கு நன்றி. என்னைப் போல நீங்களும் பிறர்க்கு உதவியாக வாழுங்கள். வணக்கம்.

மரங்களில் நான் ஏழை – எனக்கு
வைத்த பெயர் வாழை.

*–மு.மேத்தா*



மதிக்கும் தன்மை மட்டும் மக்கள் மனதில் ஊன்றச் செய்தால் உழவுத் தொழில் தானே வளர்ந்து மக்கள் வளம்பெறவும் அதுவே காரணமாகுமன்றோ!

– வி.சீ.கந்தையா

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த எழுத்தாளர், மகாவித்துவான், பண்டிதர் போன்ற பட்டங்களைப் பெற்றவர். இவரது கட்டுரையியல் என்னும் நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- "ஆடிப்பட்டம் தேடிவிதை" இந்தப் பழமொழியை வேளாண் தொழிலோடு பொருத்திக் குறிப்பு எழுதுங்கள்.
- வாழை மரத்தின் இளமைப் பெயர் 'கன்று' என்பதாகும். இதைப் போன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றின் இளமைப் பெயர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்

  தென்னை, மா, கமுகு, பனை, பலா, நெல், வேம்பு, கோழி, குதிரை,
  கிளி, குரங்கு, பசு, அணில்

- உங்கள் பள்ளி ஆண்டு மலரில் வெளியிட 'வேளாண்மையும் அதன் முக்கியத்துவமும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- வேளாண்மையோடு தொடர்புடைய பழமொழிகளைத் திரட்டி அதன் விளக்கத்தை எழுதுங்கள்.
- வேளாண் தொழில் நலிவடைந்து வரும் சூழலில், அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் சுட்டிக்காட்டி நாளிதழிற்குத் தலையங்கம் எழுதுங்கள்.



# ஒரு வேளைச் சோறு

குசேலபுரி சமஸ்தானத்துக்கு உழவுத் தொழில் ஜீவநாடி. அவர்களுடைய ஒரே பொழுதுபோக்கு ஊர்ச்சண்டை.

சமஸ்தானத்துப் பெரிய அதிபதி ஒரு தந்திரம் செய்தார். சமஸ்தானத்துக்குள் கைத்தறி நெசவு கொண்டு வந்தார். இதனால் ஊர்ச் சண்டை குறைந்தது.

சமஸ்தானத்துப் பெரியவர் கட்டையைப் போட்டதும் யுவராஜர் குபேரபூபதி பட்டத்துக்கு வந்தார். குபேரபூபதி நன்றாகப் படித்தவர். உலகம் சுற்றியவர். பரந்த மனம் படைத்தவர். தம்முடைய சமஸ்தானத்து மக்கள் வாழ்க்கைத் தரத்தை எப்படியாவது உயர்த்த வேண்டும் என்ற ஆசை பிறந்தது.

உழவுத் தொழிலால் வாழ்க்கைத்தரம் உயரப் போவதில்லை. வெறும் சோறு போதுமா, அவன் படிக்க வேண்டும்; முன்னேற வேண்டும்; விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு ஆனந்தமாக வாழவேண்டும்– தம்முடைய இந்த லட்சியத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார் அவர்.

எப்படி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது? தம்முடைய திவான்களைக் கூப்பிட்டார்! அதிகாரிகளை வரவழைத்தார்; நிபுணர்களைக் கூட்டினார்.

எல்லோரும் சேர்ந்து ஏகமனதாக இந்த முடிவுக்கு வந்தார்கள். 'நாட்டில் தொழிற்புரட்சி ஏற்படுத்த வேண்டும்!' விஞ்ஞானப் புரட்சி ஏற்படுத்தவேண்டும்! பெரிய, பெரிய தொழிற்சாலைகளை வைத்து மனிதர்களின் வசதிகளுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் நாமே செய்யவேண்டும். பஞ்சாலை, நெசவாலை, ரயில், மோட்டார்– விமானத் தொழிற்சாலை முதலியவைகளை நாம் உருவாக்க வேண்டும். இரும்புக் கனிகள் தோண்டி, மின்சார சக்தியைப் பெருக்கி, குசேலபுரியைக் குபேரபுரியாக்கிவிட வேண்டும்.

இளைஞர் குபேரபூபதி உள்ளம் பூரித்தார். தம்மைப் போலவே மற்றவர்களும் சமஸ்தான வளர்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்தது, அவருக்குப் பெருமை தந்தது.

"இவ்வளவுக்கும் பணம் வேண்டுமே?" என்றார் ஒரு நிபுணர்.

"பணம்தானே? கவலைப்படாதீர்கள். மற்ற சமஸ்தானங்களிலிருந்து கடன் வாங்குகிறேன்" என்றார் பூபதி.

"மொத்தமும் கடனாக வாங்கினால் நம் சமஸ்தானமே பறிபோய்விடும்.

பாதிக் கடன் வாங்குவோம்; மறுபாதியைப் புதிய வரிகள் போட்டு வசூலிப்போம். வளர்ச்சிக்கு வரி போட்டால் மக்கள் கொடுக்கத்தானே வேண்டும்?"

"நல்ல யோசனை!" என்றார் குபேரபூபதி. புரட்சி அதிதீவிரமான வேகத்தில் தொடங்கியது. கடனாகவும், வரியாகவும் கஜானாவுக்குள் பணம் வந்து குவிந்தது. குபேரபூபதிக்குச் சமஸ்தான மக்களே பெருஞ் செல்வம். அவர் சொந்தமாக எதற்கும் ஆசைப்பட்டதே இல்லை. தாம் எளிய வாழ்வு வாழ்ந்துகொண்டு தொழிற் புரட்சியை நடத்தச் சொல்லி, வாரி, வாரி வழங்கினார்.

பெரிய பெரிய கட்டடங்கள் சமஸ்தானத்தின் முக்கியமான நகரங்களில் முளைக்கத் தொடங்கின; பெரிய பெரிய ஆலைகள் எழும்பின; பெரிய பெரிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டன ; பெரிய பெரிய மின்சார நிலையங்கள் தோன்றின. நகரத்துத் தெருக்கள் குபேரபுரியின் தெருக்கள்போல் தோன்றின. சினிமாக் கொட்டகைகள், ஆடம்பரச் சாமான்களின் அலங்காரக் கடைகள் பெருகி வழிந்தன. உள் நாட்டில் உற்பத்தி செய்த கார்கள், ரயில்கள், விமானங்கள் எங்கும் நிரம்பின.

"மக்களின் வாழ்க்கைத் தரம் புரட்சிகரமாக வளர்ந்து வருகிறது!" என்று தாம் நம்பியதைக் கூறினார் அவர்.

பிறகுதான், அவருக்குச் சில கசப்பான ரகசியங்கள் புலப்படத் தொடங்கின. தாம் கடனாகவும் வரியாகவும் வாங்கிக் கொடுத்த பணத்தில் பாதியே தொழிற் புரட்சிக்காக உபயோகப்படுத்தப்பட்டதாம். அவர் கஜானாவிலிருந்து வாரி வாரிக் கொடுத்துப் புரட்சியை நடத்தச் சொன்னாரல்லவா? அந்தப் புரட்சியை நடத்தியவர்களில் பலர் தங்கள் தங்கள் சொந்த வாழ்வில் புரட்சியை நடத்திக் கொண்டு 'திடீர்ப் பணக்காரர்கள்' ஆகிவிட்டார்களாம்!

இந்நிலையில் திடீரென்று அவருடைய சமஸ்தானத்தில் உணவுப் பொருள் நெருக்கடி வந்துவிட்டது. உழவுத் தொழிலை முக்கியமாகக் கொண்ட அவர் நாட்டில் உணவு நெருக்கடி!

"என்ன காரணம்?" என்று அவர் கூட்டம் போட்டுக் கேட்டார். "இதைத் தீர்ப்பது எப்படி?" என்றார்.

"உணவு விவசாய இலாகாவை நம் சமஸ்தானத்தில் பெருக்கவேண்டும். அதிகாரிகளையும் உத்தியோகஸ்தர்களையும் அதிகமாக நியமிக்கவேண்டும். அவர்களைக் கொண்டு உழவர்களுக்கு உதவி செய்யச் சொல்ல வேண்டும். நெருக்கடி தீர்ந்துவிடும்!" என்றார்கள். "எவ்வளவு செலவாகும்?"

வருஷத்துக்கு இரண்டு கோடி செலவாகும்!

"என்ன செலவானாலும் சரி, நெருக்கடி தீரவேண்டும்" என்றார் மன்னர். மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை எப்பாடு பட்டாவது உயர்த்துங்கள். நான் எங்காவது கடன் வாங்கித் தருகிறேன்!"

பெரிய பெரிய கல்லூரிகளில் படித்து நீளம், நீளமான பட்டங்களைப் பெற்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். "பச்சரிசி எங்கே விளைகிறது? புழுங்கலரிசி எங்கே விளைகிறது?" பட்டதாரிகள் உத்தியோகங்களுக்கு வந்தார்கள். உழவு– உணவு இலாகா நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக

வளர்ந்து கொண்டே இருந்தது. படிக்காத பற்றாக்குறைக் குடியானவனுக்கு எப்படிக் கடன் வாங்கி விவசாயம் செய்வது என்று புரியவில்லை. அப்படி அவன் நடவு செய்யும்போது கடன் கேட்டாலும், அவன் அறுவடை செய்யும்போது அது கிடைத்தது. உரம் வாங்க அவன் கடன் கேட்டிருப்பான். அது அவன் மகளின் கல்யாணச் செலவுக்கு வந்து சேரும்.

மற்றபடி விஷயம் தெரிந்த புள்ளிகள், அந்தப் பெயரில் பணம் வாங்கி என்னவெல்லாமோ செய்தார்கள்!–

குபேரபூபதியின் காதுகளில் உணவு நெருக்கடி முற்றுகிறது என்ற செய்தி விழுந்தது. கோபமாக உணவு இலாக்கா மகா நாட்டை அவர் கூட்டுவித்தார்.

அவர்கள் கட்டுக் கட்டாக காகித மூட்டைகளைப் பெருக்கி வைத்திருந்தனர். உணவு உற்பத்தியைவிட பைல்களின் உற்பத்தி தீவிரமாக வளர்ந்து கொண்டிருந்தது. புள்ளி விவரங்களைக் காட்டினார்கள். உழவர்களுக்குக் கொடுத்த கடன்களைக் காட்டினார்கள். அந்த இலாக்காச் செலவு அவர்களுடைய பைல்களையெல்லாம் தூக்கியடிக்கக் கூடியதாக இருந்தது. காகிதங்களில் உழுது, நடவு நட்டு, நீர் பாய்ச்சி, களை எடுத்து, பயிர் செய்து உற்பத்திப் பெருக்கம் செய்திருந்தார்கள் அவர்கள்! "உற்பத்தி குறையவில்லை; வியாபாரிகள் பதுக்குகிறார்கள்" என்றார்கள் அவர்கள். வியாபாரிகள், "உற்பத்தி பெருகவில்லை; உங்கள் அதிகாரிகளுடைய கெடுபிடியால்தான் எல்லாமே கெட்டுப் போய்விட்டது" என்று கூக்குரலிட்டார்கள். இவர்களுக்குள் சண்டை பெருகப் பெருக சமஸ்தானத்துக்குள் உணவுப் பஞ்சம் தானாக வந்து குடியேறிக் கொண்டது. குபேரபூபதிதான் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பற்றிக் கவலைப்பட்டாரே தவிர, மற்றவர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி மட்டும்தான் கவலைப்பட்டுக் கொண்டார்கள். பயங்கரமான செய்திகள், பூபதிக்கு வரத் தொடங்கின. மக்கள் அரிசி கிடைக்காமல் தெருக்களில் அலையத் தொடங்கி விட்டார்களாம். கடைகளில் அரிசி கிடைக்கவில்லையாம். கூட்டங் கூட்டமாக மக்கள் அரிசிக்குக் கூப்பாடு போடத் தொடங்கினார்களாம்.

"காரணம் என்ன?" என்று மீண்டும் நிபுணர்களைக் கூப்பிட்டுக் கேட்டார் பூபதி.

"தொழிற் புரட்சிதான்!" என்று பதில் வந்தது. "என்ன!"

"ஆமாம்; வயல் வரப்பில் வேலை செய்ய ஆளில்லை. நகரத்துத் தொழிற்சாலைகளுக்குக் குடிவந்து விட்டார்கள். மிராசுதார்களும் நிலங்களைத் தரிசு போட்டுவிட்டுத் தொழிற் புரட்சி நடத்துகிறார்கள். இதில் நிறையப் பணம் கிடைக்கிறது. நெல் விதையைவிடக் கரும்போ வேறு பயிரோ விளைவித்தால் அதிக லாபம். அதையும் செய்கிறார்கள். நாம் பள்ளிக்கூடங்களையும் தொழிற்சாலைகளையும் திறந்து விட்டோம். ஆனால் ஆள் கூட்டமில்லாமல் பயிர் செய்யும் விஞ்ஞான முறைகளை இன்னும் கொண்டு வரவில்லை. தொழிற்புரட்சி வந்த பிறகு உழவு, நஷ்டத் தொழிலாகி விட்டது!"

பூபதியின் சமஸ்தானத்தில் திடீரென்று தொழிற்சாலைகள், மின்சார நிலையங்கள், இரும்புத் தொழிற்கூடங்கள், பத்திரிகை அலுவலகங்கள் எல்லாமே கதவுகளை அடைக்கும் நிலைக்கு வந்துவிட்டன. தலைநகரத்துக்குத் தெருக்களில் கார்களின் ஓட்டம் நின்றுவிட்டது. தொழிலாளர்களால் இரும்பைத்

தின்று உயிர் வாழ முடியாதென்று சொல்லிவிட்டார்களாம். பெட்ரோலையோ மின்சாரத்தையோ குடிக்க முடியாதென்றார்களாம்; பத்திரிகாலயங்களிலும் பத்திரிகைகளைச் சாப்பிட முடியுமா?' என்று கேட்டார்களாம். அரண்மனைக்குள்ளேயும் அரிசிப் பஞ்சம் வந்து விட்டது. வேலைக்காரி வெள்ளிப் பணத்தை வீசி எறிந்து விட்டாள்!' என்று அரசி கண்ணீர் வடித்தாள். 'காகித நோட்டையும் வெள்ளிப்பணத்தையும் உலையில் போட்டு வடிக்கமுடியுமா?' என்று கேட்டுவிட்டு வேலைக்காரி போய்விட்டாளாம். –குபேர பூபதிக்குத் தகர டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் மேசைக்கு வந்தன. ரொட்டிகளும் பழங்களும் காய்கறிகளும் அவர் சாப்பிட்டார். பிறகு ரொட்டியும் கிடைக்கவில்லை.

ஒரு வேளையாவது அரிசிச் சோறு சாப்பிடாவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது. மூன்று நாட்களாக அவருக்கே அது கிடைக்கவில்லை! அவர் ராணியிடம் கோபத்தோடு. கத்தினார். அவளும் திருப்பிக் கத்தினாள், "தொழில் புரட்சி நடத்தினீர்களே! இப்போது எல்லோருடைய வயிறும் புரட்சி செய்கிறதே, என்ன செய்வீர்களாம்?" என்று கேட்டாள்.

வயதான வேலைக்காரக் கிழவன் ஒருவன் பூபதியின் தந்தையார் காலம் முதல் அங்கு வேலை செய்தவன். அவனுக்குப் படிக்கத் தெரியாது. அரசியலோ, தொழிற் புரட்சியோ, முன்னேற்றமோ எதுவும் அறியாதவன் அவன்.

"மகாராஜா, கோவிச்சுக்கப்படாது! அஸ்திவாரம் போட்டுத்தான் சுவர் எழுப்பணும்; சுவரை வச்சுக்கிட்டுத் தான் சித்திரம் எழுதணும். வாழ்க்கைத் தரம்னு ஒண்ணு வளர வேண்டியதுதானுங்க! வாழ்க்கையிங்கிறது அரிசியிலே தானே இருக்குது? அது போயிட்டா உயிரும் போயிடுமே! பின்னாலே நீங்க எதை வளர்க்கப் போறீங்க?" என்றான்.

அஸ்திவாரமில்லாத அரண்மனை மாளிகைக்குள் தாம் உட்கார்ந்திருப்பதை அப்போதுதான் அறிந்தார் அரசர்.

– அகிலன்

**ஆசிரியர் குறிப்பு :** அகிலன் என்று அறியப்படும் பி.வி. அகிலாண்டம் 1922 இல் பிறந்தார். சித்திரப்பாவை, பாவை விளக்கு, புது வெள்ளம், வானமா பூமியா போன்ற சமூக நாவல்களையும் வேங்கையின் மைந்தன் என்ற வரலாற்று நாவலையும் படைத்துள்ளார். சித்திரப்பாவை என்ற நாவலுக்கு ஞானபீட விருதினைப் பெற்றார். 1988 ஆம் ஆண்டு மறைந்தார்.

## செயல்பாடுகள்

- இக்கதை உணர்த்தும் கருத்துகளைக் கலந்துரையாடி மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- 'ஒருவேளைச் சோறு' என்ற கதையை நாடகமாக வகுப்பில் நடித்துக் காட்டுங்கள்
- இக்கதையின் மையக்கருத்தை இன்றையச் சூழலோடு பொருத்தி விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள அடுக்குத்தொடர்களைக் கண்டறிந்து அத்தொடர்கள் இடம் பெறும் வாக்கியங்கள் உருவாக்குங்கள்.



# தறியும் தடுக்கும்



## நூல் நூற்றல்

*பல்லவி*

ஆடு ராட்டே சுழன் றாடு ராட்டே

*அனுபல்லவி*

சுழன்றுசு ழன்றுசுழன் றாடு ராட்டே – இனிச்
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே

*சரணங்கள்*

ஏழைகள்கண் ணீர்சொரிய மிகவருந்திப் – பல
எத்துகள் செய்தேபிழைக்கும் மனித ரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால் – அவர்
வாழ்க்கை திருந்து மென்று (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து – மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து – நூல்
இழைத்துப் பிழைப்ப ரென்று (ஆடு)

உழுது நெய்துபல தொழில்செய்து – பொருள்
உதவும் வாணிகமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்கள் எல்லாம்
தோல்வி அடையு மென்று (ஆடு )

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார் – பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார் – குடி
சுத்தப்படும் என்று சொல்லி (ஆடு)

அந்நியர்கள் நூல்கொடுத்து ஆடை கொடுத்து–நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப் பல காளைகள் நெய்ய – நாம்
காத்துக்கொள்வோம் மான மென்று (ஆடு)

– வெ. இராமலிங்கம் பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு :** நாமக்கல் கவிஞர் என சிறப்பிக்கப்பெறும் வெ. இராமலிங்கம் பிள்ளை கவிஞர், எழுத்தாளர், விடுதலைவீரர் எனப் பன்முகம் கொண்டவர். என் கதை என்ற சுயசரிதத்தை படைத்த இவர் அவளும் அவனும், கம்பனும் வால்மீகியும், கற்பகவல்லி, கீர்த்தனைகள் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- கவிதையின் மையக்கருத்தை உணர்த்தி நயம்பாராட்டி எழுதுங்கள்.
- "அந்நியர்கள் நூல்கொடுத்து ஆடை கொடுத்து–நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப் பல காளைகள் நெய்ய – நாம்
காத்துக்கொள்வோம் மான மென்று"
– நாமக்கல் இராமலிங்கம்

  "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"
– மருதகாசி

  இப்பாடல் வரிகளைக் கலந்துரையாடி ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் சமூக அறிவியல் மன்றத்தின் சார்பாக நடைபெறவிருக்கும் கைத்தறி ஆடைகளின் கண்காட்சியைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் விதமாக விளம்பரம் தயாரியுங்கள்.
- 'காளை' என்பது ஒரு ஆண் பருவம். இதுபோல ஆண் பெண் பருவப் பெயர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

## நெசவு தேசத்து மனிதர்கள்

எல்லா ஊர்களுக்கெனவும் அதன் மொழி, வரலாறு, பழமை, அங்கு வாழும் மனிதர்கள், அவர்களின் தொழில்கள், அவர்கள் எங்கிருந்து புலம் பெயர்ந்து வந்தார்கள் என்பதையெல்லாம் பொறுத்துத் தனித்தனி அடையாளங்கள் இருப்பது போல 'ஜமக்காளங்கள்' என்பது நெசவு தேசமாய் நாங்கள் பார்க்கும் பவானியின் மிகப்பெரிய அடையாளம். எங்களூரில் மட்டுமல்லாமல் சுற்றுவட்டாரங்களில் பல ஊர்களிலும் ஜமக்காளங்கள் தயாரிக்கிறார்கள். ஜமக்காளம் என்பது எங்கள் ஊரின் அடையாளம் மட்டுமல்ல, அது எங்கள் வாழ்வோடும் வாழ்வாதாரத்தோடும் பின்னிப்பிணைந்த பிரிக்க முடியா பந்தமும்கூட. காலத்தின் எந்தப் புள்ளியில் இருந்து எட்டிப் பார்த்தாலும் கல்வி ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பல குடும்பங்களின் உயர்வுக்கு இந்த ஜமக்காளத் தொழில்தான் காரணமென்பதைச் சர்வ நிச்சயமாய் ஒப்புக்கொள்ள முடியும்.

எங்கள் ஒட்டுமொத்த தலைமுறையின் முதல் பட்டதாரியாக அண்ணனை உருவாக்கியதில் இந்த ஜமக்காள நெசவுக்கு முக்கியப் பங்குண்டு. அம்மா அவர் பிறந்த ஊரில் ஐந்து வயதிலேயே வேலைக்குச் சேர்க்கப்பட்டார். பதினைந்து வயதில் பவானிக்கு வந்தவர் வெவ்வேறு வேலைகள் செய்து பழகினார். கொடுத்த வேலைகளைக் கடனுக்குச் செய்யாமல் அதில் உள்ள நுணுக்கங்களை அறிந்து, எளிய வழிகளைக் கண்டுபிடித்து, நேரத்தை மிச்சம் பிடித்து நிறைய கற்றுக்கொண்டார். எத்தனையோ வேலை செய்து ஜமக்காள சேம்மல் தடுக்கு நெய்வதில் நிலைத்து நின்றார். அதன் மூலம் கிடைத்த அனுபவங்களால் சிறிய அளவில் சொந்தமாகச்



சேம்மல் தடுக்கு நெய்யும் தறிகள் போட்டு வேலை செய்தார். அந்த வேலை கொடுத்த நம்பிக்கையால் மட்டுமே எங்களைப் பட்டதாரிகளாகவும் ஆக்கினார். சேம்மல் தடுக்கு என்பது பெரிய பெரிய ஜமக்காளங்களின் மாதிரி வடிவம். சின்ன கைக்குட்டை அளவுக்கு வெவ்வேறு டிசைன்களில் நெய்து புத்தகம் போல பைண்டிங் செய்து வியாபாரிகளுக்கு அனுப்புவார்கள். அதிலிருந்து வேண்டிய டிசைன்களில் ஆர்டர்கள் கொடுப்பார்கள். இப்போது அந்த டிசைன்களை வாட்சப்பில் அனுப்பி ஆர்டர் எடுத்துக் கொள்கிறார்கள்.

பவானிக்குள் எத்தனையோ தறிக் கொட்டாய்கள் இருந்தன. அவற்றை நம்பி எத்தனையோ நெசவாளிகளும் இருந்தார்கள். இப்போது அடுத்தடுத்த தலைமுறை பிள்ளைகள் படித்து வேறுவேறு வேலைகளுக்குப் போய்விட்டதால் நெசவை முதன்மைத் தொழிலாகக் கொண்ட நெசவாளிகளும், முதலாளிகளும் குறைந்திருக்கிறார்கள். ஆனாலும் இன்னுமொரு தலைமுறை ஆன்லைன் வர்த்தகம் மூலமாக இந்த ஜமக்காளங்களை அடுத்த தளத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். விதவிதமான வகைகளில், விதவிதமான அளவுகளில் நெய்யப்படும் ஜமக்காளங்கள் இந்தியாவின் பல பகுதிகளுக்கு மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

ஒருவர் இருவர் மட்டுமல்லாமல் 'ஹால் கார்பெட்' என்னும் பெயர் கொண்ட பெரிய ஜமக்காளங்களை மூன்று பேர்வரை நெய்வார்கள். ஒரே தாளகதியில் மூவரும் பலகையை மிதித்து, நாடாவைச் செலுத்தி, இழுத்து அடித்தால்தான் ஒரு இழை ஜமக்காளத்தின் ஒரு வரியாக மாறும். அப்படி ஒவ்வொரு வரிகளாக நெய்து ஒரு ஜமக்காளத்தை உருவாக்க ஒரு வாரம் முதல் ஒரு மாதம் கூட ஆகலாம். ஒரு புறம் நீண்டிருக்கும் பாவு சுருங்கச் சுருங்க மறுபுறம் வண்ண வண்ணமாக மாறும் நூல்களால் ஜமக்காளம் உருவாகும். ஜமக்காளமாய் மாறிப் போன பாவைக் கம்பி போட்டுத் திருப்பிப் பலகையில் சுருட்டுவதற்கு, ஒரு சரக்கு லாரியைத் திருப்புவதற்குத் தேவைப்படும் சக்திக்கு நிகரான சக்தி தேவைப்படும். ஆண்களைப் போலவே பெண்களும்கூட அத்தனை வலிமையோடு இதைச் செய்வது தான் ஆச்சர்யமான ஒன்று.

நாடாக்களுக்கான தார் சுற்றும் ஆயாக்கள் வெத்தலை போட்டபடி பாடும் பாடல்களும், சொல்லும் சொலவடைகளும், விடுகதைகளும் அத்தனை அழகானவை. தறிக் கொட்டாய்களில் நடக்கும் கேலிகளும், கிண்டல்களும் அத்தனை சுவாரஸ்யமானவை. நெசவு நெய்து கொண்டே வீட்டில் நடந்த நிகழ்வுகளை, சண்டைகளை, சந்தோசங்களை, துக்கங்களை என எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளும் இடமாக தறிக்கொட்டாய்கள் இருந்தன. சந்தோசங்களைப் பகிர்ந்துகொள்ளும் போது எல்லோர் முகங்களிலும் வெளிப்படும் புன்னகை, வலிகளைப் பகிர்ந்துகொள்ளும்

போது கண்ணீராகவும் வெளிப்படும். சாயங்கால கூலிகள் அன்றைய பொழுதுக்கோ, அடுத்தநாள் தேவைக்கோ போதாதபோது யாராவது கடன் கொடுத்து உதவும் அன்பில் நெகிழும் உள்ளங்கள் அதிகமாய் இருந்தன.

நெய்யும்போது களைப்பு தெரியாமல் இருக்க யாரோ ஒருத்தர் பாடும் பாடல்களுக்குத் தறியில் ஓடும் நாடாக்களே இசையமைக்கும். தறிக்கொட்டாய்களில் தொட்டிலில் தூங்கும் குழந்தைகளுக்குத் தறிச்சத்தமே தாலாட்டாக மாறும். அங்கு வேலை செய்பவர்களின் பிள்ளைகளான எங்களுக்குத் தார் குச்சிகள் தான் விளையாட்டுப் பொருட்களாய் இருந்தன. தீர்ந்து போகக் காத்திருக்கும் ரீஃபில்களைத் தார் குச்சிகளில் சொருகி பேனாக்களாக மாற்றியதும், வாசல் சுத்தம் செய்யும் சீமாற்றுக் குச்சிகளைச் சொருகி கத்திச்சண்டை போட்டதும், உடைந்த குச்சிகளை வைத்து மர வீடுகள் செய்து விளையாடியதும், நூலில் செய்த பந்துகளால் அடித்துக்கொண்டதும் நெசவுக் குவியல்களோடு சேர்ந்த நினைவுக்குவியல்கள்.

ஜமக்காளங்களை நெய்வதைப்போலவே அதில் பெயர்கள் தைப்பதும் அத்தனை அழகான கலை. அத்தைகள் சிலர் அந்த வேலை செய்யும்போது அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். நேராக உட்கார்ந்து கொண்டு எழுத்துக்களைத் தலைகீழாகத் தைப்பார்கள், தைத்து முடித்தவுடன் எழுத்துக்கள் நேராக தெரியும். கல்யாண மணமக்களுக்குப் பரிசாக கொடுக்க அவர்களது பெயர்களைத் தைத்து வாங்கிச்செல்வது, கோவில் களுக்கு நன்கொடையாக கொடுக்கும் ஜமக்காளங்களில் கொடுப் பவர்கள் பெயர்கள் தைப்பது, முக்கியமான பிரமுகர்களுக்குப் பரிசு கொடுக்கும்போது பெயர் தைப்பதென நிறைய உண்டு. பட்டு ஜமக்காளங்களில் சாமி படங்கள், மயில்கள், மான்கள், கோபுரங்கள், மனித முகங்கள் எனப் பல்வேறு விதமான கை வேலைப்பாடுகளால் ஜமக்காளங்கள் அழகழகாய் மாறும். அதற்கான பொறுமையும், நெசவின் மீதான நேசமும், உழைப்பின் மீதான ஆர்வமும் தான் இங்கிருக்கும் மக்களை வாழ்வின் மீதான பேரார்வத்தோடு இயக்குகிறது.

பவானியின் பெரும்பாலான குடும்பங்களின் பின்புலம் நெசவினூடே தான் பிணைந்திருக்கும். கடந்த தலைமுறையின் கால்கள் தறியின் மிதி பலகையை மிதித்ததினால் தான் இந்த தலைமுறையின் கைகள் கணினியின் விசைப்பலகைகளைத் தட்டிக்கொண்டிருக்கின்றன. தறியடித்து நெசவு நெய்த கைகள் தான் இன்று தங்கள் பிள்ளைகளைப் பேனா பிடிக்கவும், மவுஸ் பிடிக்கவும், தொடு திரைகளின் வழியே இந்தப் பெரும் உலகோடு உரையாடவும் வைத்திருக்கின்றன.

ஜமக்காளத்திற்குத் தேவையான நூல்களை மில்களில் இருந்து கொண்டு வர, அதைக் கடைகளுக்கு விற்க, அதற்குத் தேவையான சாயமேற்ற,

அதைத் தறிக்கொட்டாய்களில் கொண்டு சேர்க்க, நூலைப் பாவாக, தாராக, ஜமக்காளமாக மாற்ற, அதை உள்ளூர் சந்தைகளுக்குக் கொண்டு போய் விற்க, வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்ய என இந்த ஜமக்காளத்தின் பின்னால் பெரிய உழைப்புச் சங்கிலியும், அதைச் சார்ந்த மனிதர்களின் வாழ்வும் அடங்கியிருக்கிறது. வண்ணச் சேலை வெள்ளையாக மாறும் தருணத்தில் வலிகள் நிறைந்திருக்கும். ஆனால் வெள்ளைப் பாவு வண்ண ஜமக்காளமாக மாறும் தருணங்களில் நெசவு தேசத்து மனிதர்களின் உழைப்பு நிறைந்திருக்கும்; அதன் மீது அன்பின் வாசனை பரவியிருக்கும்.

'ஜமக்காளம்' என்பது நெசவு தேசத்தின் அடையாளம். அந்த அடையாளத்தை எல்லாக்காலங்களிலும் தக்க வைத்துக் கொள்ளவும் தாங்கிப்பிடிக்கவும் எல்லாத் தலைமுறையும் தயாராகவே இருக்கும் என்பதுதான் நெசவு தேசத்து மனிதர்களின் நம்பிக்கை. நம்பிக்கை அதானே எல்லாம்..!

– தனபால் பவானி

**ஆசிரியர் குறிப்பு :** புதுக்கவிஞர்களுள் ஒருவர். தனது கவிதை ஆளுமையால் கவிச்சுடர் என்னும் விருதைப் பெற்றுள்ளார். நெசவு தேசத்து மனிதர்கள் என்னும் கட்டுரை தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

### செயல்பாடுகள்

- ஜமக்காளம் நெய்யும் முறையைப் பாடப்பகுதியின் அடிப்படையில் குறிப்பாக எழுதுங்கள்.
- "ஜமக்காளம் என்பது எங்கள் ஊரின் அடையாளம் மட்டுமல்ல அது எங்கள் வாழ்வோடும் வாழ்வாதாரத்தோடும் பின்னிப் பிணைந்த பிரிக்க முடியாத பந்தமும்கூட" இதுபோன்று மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ள கைத்தொழில்களைப் பட்டியலிடுங்கள்.

# கைத்தறி நெசவாளர்கள்



ஒரு காலத்தில் உலகம் பார்த்து வியப்படையக் கூடிய வகையிலே உயர்ந்த முறையில் நெசவு செய்து புகழ் பெற்ற நம் நாட்டு நெசவாளர்களுக்கு ஏன் இன்று இந்த நிலை? அவர்கள் பல நெருக்கடிகளுடனேயே வாழ வேண்டி யிருக்கிறது; நெசவாளியும் நெருக்கடியும் ஒன்றாக பிறந்தது போல் என்றைக்கும் ஏதாவது ஒரு நெருக்கடி அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் நெய்வதற்கு நூல் கிடைக்காது; நூல் கிடைத்தால் மற்ற சாதனங்கள் கிடைக்காது; எல்லாம் கிடைத்து நெய்தால், துணி விலை போகாது; தக்க ஊதியம் கிடைக்காது; இந்த நிலையைத்தான் கடந்த பல ஆண்டுகளாக நாம் கண்டு வந்திருக்கிறோம்; "இதற்கு ஒரு பரிகாரம் கண்டாகவேண்டும். கைத்தறிப் பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து ஒரு முடிவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இந்த விஞ்ஞான யுகத்தையும் சமாளித்துக்கொண்டு ஆலைகளுடன் போட்டியிடக்கூடிய ஒரு தொழிலாக இருக்கிறது இது."

இந்தக் கைத்தறித் தொழிலுடன் எனக்குள்ள தொடர்பும் அக்கறையும், முன்பிருந்தே இருந்து வருகிறது; இதற்குக் காரணம், நான் பிறந்து – வளர்ந்து – வாழ்ந்து வருகின்ற காஞ்சிபுரம், நெசவாளர்கள் நிறைந்துள்ள பகுதியாகும்.

காஞ்சிபுரம் என்பது–நெசவாளர்கள் நிரம்பிய பேட்டைகளும், பாளையங்களும், வீதிகளும் நிறைந்துள்ளதாகும். நெசவுத் தொழிலை நம்பியுள்ள மக்கள் நிறைந்த பகுதியில் வாழ்கின்ற காரணத்தால், பல ஆண்டுகளாக அவர்களது சிரமங்களை நேரடியாக உணர்ந்துள்ள நான், இந்தத் தொழிலின் மீது அக்கறை காட்டுவது இயற்கையே!

நெசவாளர்களின் துன்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கின்றது; அதற்குரிய பரிகாரங்கள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது.

நூல் எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்; நூலுடன் தொடர்பு கொண்டுள்ள நெசவாளர்களின் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதாகத்தான்

இருக்கும்; பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவது தான் இப்போது நாம் செய்ய வேண்டிய வேலை!

மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் வசதியும் – விஞ்ஞானக் கருவிகளின் துணையும் பொறிகளின் உதவியும் கிடைக்காத நிலையிலும், நேர்த்தியாக – நீடித்து உழைக்கக்கூடிய நல்ல தரமுள்ள மெச்சத்தக்க – வியக்கத்தக்க வகையில் நமது கைத்தறியாளர்கள் துணிகளைத் தயாரிக்கின்றனர்!

ஆலைகளில் பொறிகளின் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்கைவிடக் கண்ணைக் கவரத்தக்க வகையில் புதுப்புது ரகங்களைக் கைத்தறியில் உற்பத்தி செய்கின்றனர்!

ஆலைகளில்தான் இப்படிப்பட்ட துணிகளை உற்பத்தி செய்ய முடியும்' என்ற நம்பிக்கை இருந்து வந்த காலம் ஒன்றிருந்தது; ஆனால், இன்று ஆலைகளையும் மிஞ்சத்தக்க வகையில் – விதவிதமான வேலைப் பாடுகளுடன் வேகமாகவும் தயாரிக்க முடியும் என்பதை, நமது நெசவாளர்கள் மெய்ப்பித்து வருகின்றனர்!

இருந்தும், அவர்களது வாழ்வில் முன்னேற்றமில்லை. எதிர்காலத்தில் நம்பிக்கை ஏற்படக் கூடியதாக இல்லை! என்றாலும் பல்லாண்டுகளாக இருந்துவரும் கலைத் திறனை – உலக மக்கள் பாராட்டி வரவேற்கும் அளவுக்கு வளர்ந்துள்ள வெளிநாட்டுச் சந்தையிலிருந்து, ஏராளமான, பணத்தை ஈட்டித் தரும் ஒரு நேர்த்தியான கலைத் திறனை – அப்படியே அடியோடு அழிந்து போகும்படி விடுவது விரும்பத் தக்கதன்று!

வெள்ளை வேட்டியாகட்டும்–வண்ணச் சேலையாகட்டும் – எதைப் பார்த்தாலும் கண்ணைக் கவரக் கூடியதாக – கருத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்குமே அல்லாது, 'நம்முடைய அனுதாபத்திற்குப் பாத்திரமாக வேண்டும்' என்ற பரிதாபத்திற்குரிய நிலையில் எதுவும் இருக்காது!

எந்தச் சரக்கைப் பார்த்தாலும், 'அதை வாங்கலாமா' என்று தோன்றுமே தவிர, அந்தச் சரக்கின் நேர்த்தியைப்பற்றி – நீடித்து உழைக்கும் தரத்தைப் பற்றி அய்யப்பாடோ, 'நெசவாளியின் நேர்மை – நாணயம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்' என்றோ யாருக்கும் தோன்றாது.

அப்படிப்பட்ட நெசவாளர் குடும்பங்கள் பல இன்று ஏழ்மையிலே உழலுகின்றது! அவர்களிடம் உள்ள தொழில் திறனை வேறு எதிலும் காண முடியாது!

கைத்தறியாளர்கள்–புதுப்புது 'மோஸ்தர்'களைக் கண்டு பிடிக்கிறார்கள்! ஆலைக்காரர்கள் கூட அப்படிக் கண்டு பிடிக்க முடியாது.!

நெசவாளி – தான் மட்டுமா வேலை செய்கிறான்? அவனுடைய மனைவியும், மகனும் கூட அல்லவா வேலை செய்கிறார்கள்? இருந்தும் வாழ்க்கைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை! அவர்களுடைய வாழ்க்கையில் நிம்மதி இல்லை! அவர்கள் வாழ்வு வளம் பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்பதே நம் குறிக்கோள்!

–அண்ணா அவர்களின் உரை

**ஆசிரியர் குறிப்பு :** பேரறிஞர் என்னும் சிறப்புப் பெயருடைய அண்ணாதுரை என்ற அண்ணா மிகச்சிறந்த சொற்பொழிவாளர் ஆவார். அரசியலிலும் தமிழ் இலக்கியத்திற்கும் முக்கிய தொண்டாற்றியுள்ளார். வேலைக்காரி, ஓர் இரவு ஆகிய நாடக நூல்களையும் செவ்வாழை போன்ற சிறுகதை நூல்களையும் கம்பரசம், தீ பரவட்டும் போன்ற கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியின் மூலம் அறிந்துகொண்ட நெசவாளர்களின் பிரச்சினைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- நெசவாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் குறித்தும் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.
- நலிவடைந்து வரும் நெசவுத் தொழிலையும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காகத் தொழில்துறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.



# ஆலைகள் செய்வோம்



## பாரததேசம்

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்.

ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம்செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல்செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்

மந்திரங் கற்போம்வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம்கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்

காவியஞ் செய்வோம்நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம்கொல்ல ருலைவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்

– பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு :** சுப்ரமணியன் என்ற இயற்பெயர் கொண்ட பாரதியார் திருநெல்வேலி, எட்டயபுரத்தில் பிறந்தார். மகாகவி, தேசிய கவி போன்ற சிறப்புப் பெயர்களால் அறியப்படுபவர். இவர் இதழ் ஆசிரியர், விடுதலை வீரர், சமூகச் சீர்திருத்தவாதி எனப் பலதளங்களில் அறியப்படுபவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு என்பன பாரதியின் முப்பெரும் படைப்புகளாகும்.

**செயல்பாடுகள்**

- பாடலை வாசித்து மையக்கருத்தை உணர்த்தி நயம்பாராட்டுங்கள்.
- இக்கவிதையில் பாரதியார் குறிப்பிடும் தொழில்களை வரிசைப்படுத்துங்கள்.
- பாடலில் வரும் கடினச் சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

## உலைக்களக் காட்சி

கவிப்பேரரசு கம்பர் தாம் இயற்றிய காவியமான இராமாயணத்தில் காவியத்தின் சிறப்பு மிகுபடும் வகையில் பல உத்திகளைக் கையாண்டுள்ளார். அவற்றில் ஒன்று உலைக்களக்காட்சியாகும். உலைக் களம் பெரும்பாலும் இரும்புப் பட்டறையைக் குறிப்பது. பொற்கொல்லர் செய்யும் பட்டறையையும் உலைக்களம் என்றே கம்பர் கூறியுள்ளார்.



உலைக்களத்தைப் பற்றிய செய்திகள் எட்டு இடங்களில் கம்பர் எடுத்துக் காட்டியுள்ளார். அவை பாலகாண்டத்தில் ஒன்று, கிட்கிந்தா காண்டத்தில் மூன்று, சுந்தர காண்டத்தில் இரண்டு, யுத்த காண்டத்தில் இரண்டு என்பனவாம்.

கம்பர் கிட்கிந்தா காண்டத்தில் உள்ள கார்காலப் படலத்தில் உள்ள 8 ஆவது பாடலில் மழைக் காலத்தில் மின்னுகின்ற மின்னலை உலைக் களத்தில் தோன்றும் தீயுடன் ஒப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் கார்காலத்தைக் கருமானாகவும் மழையைத் தரும் வாடைக் காற்றினைத் துருத்தியில் எழும் காற்றாகவும் வானத்தில் எழும் மின்னலினை உலைக்களத்தில் எழும் நெருப்புச் சுடராகவும் உருவகம் செய்துள்ளதைக் காண்கின்றோம். அடுத்து கிட்கிந்தா காண்டத்தில், வாலிவதைப் படலக் காட்சியைக் காண்போம். இதில் வாலி, சுக்கிரீவன் மார்புகளுக்கு இரும்பும் இவ்விருவரது கைகளுக்கு இரும்பை அடிக்கும் சம்மட்டி என்னும் கருவியும் உவமையாகக் கம்பர் கையாண்டுள்ளார். இவ்வாறே கும்பகருணன் மாருதியாகிய அநுமன் மேல் மலையை எடுத்து வீச அது அநுமன் மேல் பட்டு தீப்பொறிகள் எழுகின்றன.

இங்கே மலையைச் சம்மட்டியாகவும் மாருதியின் தோள் பட்டையைக் கல்லாகவும் அதில் எழும்புகின்ற தீப்பொறிகள் காய்ச்சிய இரும்பிலிருந்து எழும் சுடராகவும் உவமைப் படுத்தியுள்ளதைக் காண்கிறோம். இதைப் போல் பஞ்ச சேனாதிபதிகளின் கண்கள் நெருப்பு உமிழ்வதை உலைக்களத்தில் எழும் தீப்பொறிக்கு உதாரணமாக்கப்பட்டுள்ளது.

– முத்து எத்திராசன்

**ஆசிரியர் குறிப்பு :** செஞ்சிக்கு அருகிலுள்ள அவியூர் எனும் சிற்றூரில் 1934–ஆம் ஆண்டு பிறந்தார். கம்பர் காட்டும் கார்காலம், சங்க இலக்கியச் சமுதாயம், கம்பர் காட்டும் பாலை நிலம் முதலிய நூற்களை எழுதியுள்ளார். இப்பாடப்பகுதி பாடல்கள் கூறும் பல்சுவை செய்தி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

**செயல்பாடுகள்**

- பாடப்பகுதியில் குறிப்பிடப்படும் உவமைகளை வரிசைப்படுத்துங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த ஆலைத் தொழில்களைப் பட்டியலிடுங்கள்.

## கொல்லுத் தொழில்

இரும்பை உருக்கிக் கருவிகள் செய்யும் தொழிலைக் கொண்டவர்கள் கொல்லர் எனப்பட்டனர். இலக்கியங்கள் இவர்களைக் கருங்கொல்லர் என்றும் வழங்குகின்றன. பொன், வெள்ளி போன்ற மதிப்புமிக்க உலோகங்களில் அணிகலன்கள் செய்பவர்கள் பொற்கொல்லர் எனப்படுகின்றனர்.

இரும்பே இவர்களின் மூலதனம். இரும்புத் தொழில் செய்யும் இவர்களைச் சங்க இலக்கியத்தின் பல பாடல்கள் காட்டுகின்றன. வேளாண் கருவிகள், படைக் கருவிகள் மற்றும் மக்கள் வாழ்வியலில் அன்றாடப் புழங்குப் பொருட்கள் பலவற்றையும் கொல்லர் தயாரித்து வழங்கியதால் சமூகத்தில் மதிப்புடன் திகழ்ந்தனர்.

கொல்லர் உலைக்கலன்கள் பெரும்பாலான இடங்களில் அமைந்திருந்தன. கொல்லர்கள் தோல் துருத்தியைக் காலால் மிதித்துத் தீயுண்டாக்கினர். அவர்கள் குறட்டினையும் பயன்படுத்தினர்.



மழைக்காலத்து இரவில் மின்மினி மொய்த்த புற்றினைக் கரடியொன்று அடித்து உடைக்கின்றது. அப்போது மின்மினிப் பூச்சிகள் சிதறியோடுவது கொல்லன் உலைக்களத்தில் சம்மட்டியாலடிக்கும் பொழுது தீப்பொறி சிதறுவது போல் உள்ளதாக அகநானூறு உவமிக்கிறது.

பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் (அகம்.72)

வெயிலில் காய்ந்து வெம்மையேறிய பாறையினை 'உலைக் கல்லன்ன பாறை' என்றும் உவமையாகக் கூறுகின்றனர் சங்கப் புலவர்கள். அதியமானின் படைக்கலங்கள் கங்கு சிதைந்தும் நுனி மழுங்கியும், 'கொற்றுறைக் குற்றில்லத்தில்' கிடந்ததாக ஔவையார் பாடுகிறார்.

**தற்காலச் சமூகத்தில் கொல்லர் தொழில்**

கொல்லர்களின் வேலையும் தச்சர்களின் வேலையும் பொதுவாகக் கலந்தே இருக்கிறது. பெரிய வேலைகளில் மட்டுமே மாறுபாடு இருக்கிறது. மாட்டு வண்டி, கலப்பை, மண் வெட்டி போன்றவற்றில் இருவருக்குமே வேலை இருக்கிறது. தச்சர் கட்டைகளைச் செதுக்கி வடிவமைத்துக் கொடுத்தார் என்றால் இரும்பை உருக்கி, தட்டி, வடிவமைத்து கட்டைகளோடு இணைக்கும் வேலை கொல்லரைச் சேர்ந்ததே. கட்டைகளில் செய்யப்படும் கணைகள் போன்றவற்றைத் தச்சருக்குப் பதிலாக சில கொல்லர்களே செய்து கொள்கிறார்கள்.

**துருத்தி மற்றும் ஊது**

துருத்தி மற்றும் ஊது இரண்டில் ஏதாவது ஒன்று இல்லை என்றால் கொல்லர்கள் இல்லை. ஊது என்பது லாரி வட்டகைகளுக்கு (டயர்) உள்ளே இருக்கும் ஊதுருளை (டியூப்) போன்று இருக்கும். ஊதுருளையின் மேல் பகுதியில் ஒரு கயிறு கட்டப்பட்டு அது பட்டறை அமைந்திருக்கும் உத்தரத்தின் மேலே போடப்பட்டு, மீண்டும் கீழே கொல்லரின் கைக்கு வருகிறது. இதனைப் போன்று ஒரு குழாய் ஊதுருளையில் இணைக்கப்பட்டு நெருப்பு பற்ற வைக்கும் இடத்திற்குச் செல்கிறது. கயிற்றை இழுத்து இழுத்து விட காற்று ஊதுருளையிலிருந்து குழாய் வழியாகச் சென்று நெருப்பு மூழ்கிறது. இது ஆரம்பக் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது பயன்பாட்டில் இல்லை.

தற்போது கையில் சுழற்றும் துருத்திக்குப் பதிலாக மின்சாரத் துருத்தியைப் பயன்படுத்துகின்றனர்.

நவீன மயமாக்கப்பட்டத் தொழில்துறையால் தற்போது அழியும் நிலையிலுள்ள மரபுத் தொழில்களுள் கொல்லுத் தொழிலும் ஒன்றாக

உள்ளது. முன்பு, போர்க் கருவிகள், வேளாண் கருவிகள் போன்றவற்றை வடிவமைப்பதில் கொல்லர்களின் பங்கு அதிகமாக இருந்தது. தற்போது போர்க் கருவிகளுக்கும் இவர்களுக்குமான உறவு அற்றுப்போய்விட்டது. வேளாண் கருவிகளும் நவீனமாக்கப்பட்டுவிட்டன. இல்லப் புழங்குபொருள்கள் செய்வதில் மட்டும் ஓரளவிற்கு இவர்கள் ஈடுபடுகின்றனர். அதுவும் பெரிய வருமானத்தைக் கொடுப்பதில்லை. எனவே, மரபுத் தொழிலான கொல்லுத் தொழிலைவிட்டு பல குடும்பங்கள் மாற்று வேலைக்குச் சென்றுவிட்டதைக் காணமுடிகிறது. தமிழகத்தில், அங்கொன்றும் இங்கொன்றுமாகவே சிலர் இத்தொழிலில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

– முனைவர் ஆ மணவழகன்

**ஆசிரியர் குறிப்பு :** முனைவர் ஆ. மணவழகன் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராகவும் தமிழ்நாடு அரசின் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தின் பொறுப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். இவர் பல்வேறு ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். கூடாகும் கள்ளிகள் என்னும் கவிதைத் தொகுப்பையும் ஆவணப் படங்கள் பலவற்றையும் இயக்கியுள்ளார். இவர் குடியரசுத் தலைவரின் இளம் ஆய்வறிஞர் விருதை 2007– 2008 ஆம் ஆண்டு பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசின் இளம் தமிழ் ஆய்வாளர் விருதையும் பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியினை வாசித்து "தற்காலத்தில் கொல்லுத்தொழில்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- எத்தொழில் செய்யினும் அத்தொழிலில் நாம் வல்லவர்களாகிட வேண்டும் என்ற செய்தியை விளக்கும் வகையில் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற தலைப்பில் விளக்கக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- "நவீன மயமாக்கப்பட்ட தொழில் துறையால் தற்போது அழியும் நிலையிலுள்ள மரபுத் தொழில்களுள் கொல்லுத் தொழிலும் ஒன்றாக உள்ளது." இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் சுட்டிக்காட்டி நாளிதழ் ஒன்றிற்குத் தலையங்கம் எழுதுங்கள்.
- நலிவடைந்து வரும் உழவுத்தொழில், நெசவுத்தொழில், கொல்லுத்தொழில்களை நவீனத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மீட்டெடுத்து உயர்த்தும் வழிமுறைகளைக் குறிப்பிடுங்கள்.
- தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக வெளியிடப்படும் மலரில் வெளியிடுவதற்காக உழவுத்தொழில், நெசவுத்தொழில், கொல்லுத்தொழில் பற்றிய பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், பொன்மொழிகள் போன்றவற்றைத் திரட்டி மலர் ஒன்று தயாரியுங்கள்.



## சொல்லகராதி

| | | |
|---|---|---|
| அகண்ட | – | பரந்த |
| அகில் | – | மலை வேம்பு |
| அணை | – | நீர்த் தேக்கம் |
| அதிபதி | – | தலைவன் |
| அனுதாபம் | – | இரக்கம் |
| அஸ்திவாரம் | – | அடித்தளம் |
| ஆழி | – | கடல் |
| இலாகா | – | துறை, நிறுவனம் |
| ஈதல் | – | கொடுத்தல் |
| உண்டி | – | உணவு |
| உத்தியோகஸ்தர் | – | வேலை பார்ப்பவர்கள் |
| உத்தி | – | தந்திரம் |
| உற்றுழி | – | துன்பக்காலம் |
| ஊதியம் | – | கூலி, சம்பளம் |
| ஊருணி | – | ஊரின் நடுவே உள்ள நீர்நிலை |
| ஊழியம் | – | தொண்டு |
| எத்து | – | வஞ்சகம் |
| எந்தை | – | என் தந்தை |
| எழில் | – | அழகு |
| என்பு | – | எலும்பு |
| ஐயம் | – | சந்தேகம் |
| கதிரவன் | – | சூரியன் |
| கமத்தொழில் | – | உழவுத்தொழில் |
| கருமான் | – | கொல்லன் |
| கவின் | – | அழகு |
| கழனி | – | வயல் |
| கழை | – | கரும்பு |
| களிறு | – | ஆண்யானை |
| களேபரம் | – | பரபரப்பு |
| கனி | – | பழம் |
| கஜானா | – | கருவூலம் |
| கான் | – | காடு |
| குடகு | – | மேற்கு |
| குந்து | – | உட்காரு |
| குருதி | – | இரத்தம், உதிரம் |
| குழல் | – | மயிர்/கூந்தல் |
| குஷி | – | மகிழ்ச்சி |
| கூற்றம் | – | நாட்டின் பகுதி |
| கேளிர் | – | உறவினர் |
| கோங்கு | – | ஒரு வகை மரம் |
| சம்மட்டி | – | சுத்தியல் |
| சமஸ்தானம் | – | மாநிலம் |
| சிந்தை | – | மனம்/ எண்ணம் |
| சுடர் | – | ஒளி |
| சுனை | – | ஊற்று நீர் |
| சேமம் | – | இன்பம், நல்வாழ்வு |
| சேவடி | – | சிவந்த பாதங்கள் |
| தண்மை | – | குளிர்ச்சி |
| தறி | – | நெசவுப்பொறி |
| திருவடி | – | இறைவனின் பாதம் |
| திவான் | – | உயர் அதிகாரி |
| தூரிகை | – | எழுதுகோல் |
| தெம்பு | – | உற்சாகம், தைரியம் |
| நகை | – | சிரிப்பு |
| நங்கை | – | கன்னிப்பெண் |
| நளிர் | – | குளிர் |
| நிபுணர் | – | வல்லுநர் |
| நிலன் | – | பூமி |
| நுணுக்கம் | – | கூர்மை,கூரறிவு |
| நுந்தை | – | உன் தந்தை |
| நெஞ்சம் | – | உள்ளம், மனம் |
| பகடு | – | எருது |
| பட்டணம் | – | நகரம் |
| பதர் | – | வெற்றுத் தானியம் |
| பரவை | – | கடல் |
| பரிதி | – | சூரியன் |
| பார் | – | உலகம் |
| பாழ் | – | அழிவு |
| பிடி | – | பெண் யானை |
| பிணி | – | நோய் |
| பிண்டம் | – | தசை |
| பிராந்தியம் | – | வட்டாரம் |
| புகல் | – | புகுதல் |
| புள் | – | பறவை |
| புனல் | – | நீர் |
| பெற்றி | – | இயல்பு, பெருமை |
| பேதை | – | பெண் |
| பொலிவு | – | ஒளி பொருந்திய |
| மத்தகம் | – | யானையின் நெற்றி |
| மடு | – | சிறுகுளம் |
| மந்தி | – | பெண் குரங்கு |
| மழு | – | கோடாரி |
| மா | – | பெரிய |
| மாரி | – | மழை |
| முகடு | – | உச்சி |
| முழவு | – | மத்தளம் |
| மெய் | – | உடம்பு |
| யாமம் | – | இரவு |
| வஞ்சனை | – | ஏமாற்றுவது, கபடம் |
| வஞ்சினம் | – | சபதம் |
| வண்ணம் | – | நிறம் |
| வண்மை | – | வலிமை |
| வல்லார் | – | வலிமையுடையவர் |
| விசும்பல் | – | விம்மியழுதல் |
| வியப்பு | – | ஆச்சரியம் |
| வியாதி | – | நோய் |
| விளிப்பேன் | – | அழைப்பேன் |
| வெள்ளம் | – | தண்ணீர் |
| வெற்பு | – | மலை/குன்று |
| ஜீவனம் | – | பிழைப்பு, வாழ்க்கை |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***